உ

ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்

ஸ்ரீ அரங்கநாதப் பெருமாளின் பூரண அருளைப் பெற்று "ஸ்ரீ நாலாயிர திவ்ய பிரபந்தம்" இயற்றி அருளிய,

பன்னிரு ஆழ்வார்கள் சரித்திரச் சுருக்கம்.

இ∴து


குமாரபாளையம் ஆனந்தாஸ்ரமம் கோவிலூர் மரபு தவத்திரு. சோம. கோபால சுவாமி சுவாமி அவர்களின் விருப்பப்படி



குமாரபாளையம் எடப்பாடி ரோடு காவேரி நகரில் இருக்கும் ஆனந்தாஸ்ரமத்தின் முதலாவது தலைவர் ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமி அவர்களின் 13-ஆம் ஆண்டு குருபூஜை விழாவில், ஷை ஆஸ்ரமத்தின் 2-ஆவது தலைவர். உயர்திரு-வாளர். V. R. S. இராமசாமி செட்டியார் அவர்களால் ஆழ்வார்களைப்போல பக்தகோடிகளும் ஸ்ரீ அரங்கப்பெருமாள் திருஅருளில் ஆழ்வார்கள் ஆகி இகபர இன்பங்களை அடைந்து உய்யும் பொருட்டு இலவசமாக வெளியிடப்பட்டது.

ஸ்ரீமுக ஆண்டு வைகாசி மீ சா-ம் தேதி புதன்கிழமை

(19—5—1993)



பன்னிரு ஆழ்வார்கள்

பதிப்பகத்தார்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

யாகராயநகர் | தெப்பக்குளம்
சன்னை–600 017 | திருச்சி–620 002

சென்னையில் லிப்கோ ஸ்டாகிஸ்டுகள் :

எம். தாமோதரம் அண்டு கம்பெனி,
08, கார்ப்பொரேஷன் பழக் கடை, சென்னை-600 108.

[விலை ரூ. 2.50

முதற் பதிப்பு:1984
மறு அச்சு:1988

அச்சிட்டோர்: இந்தியா ஆப்செட், சென்னை-600 014.

பொருள் அடக்கம்

அவ்விறைவனது புகழைக் கேள் என்கின்றன; என் கண்கள் பிறப்பு, இறப்பு இல்லாத அவ்விறைவனைக் காண் என்று சொல்லு கின்றன'' என்பார்; திருமாலினது குணங்களையும், செயற்கருஞ் செயல்களையும் சொல்லி வாழ்த்துவார்; திருமாலின் திருவடிகளைப் போற்றாதார்க்கு வீட்டின்பம் இல்லை என்பார். இங்ஙனம் கண் டோர் அனைவரும் பாராட்டி வணங்கிப் போற்றும் உண்மை அறிவுச் செல்வராய்ப் பொய்கையார் விளங்கினார்.

இவரால் பாடப்பட்ட பெருமை பொருந்திய நகரங்கள்: (1) திருவரங்கம், (2) திருவிண்ணகர், (3) திருக்கோவலூர், (4) திருவெஃகா, (5) திருவேங்கடம், (6) திருப்பாற்கடல், (7) பரமபதம் முதலியனவாகும்.

2. பூதத்தாழ்வார்

'தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று ஔவையாரால் புகழ்ந்துரைக்கப்பட்ட தொண்டை நாட்டில், பல்லவ மன்னர்களால் சிறந்த ஒரு நகரம் அமைக் கப்பட்டது. அந்நகரம் சென்னைக்குத் தெற்கில் கடற்கரையில் உள்ளதால் அதற்குக் 'கடல்மல்லை' என்று பெயரிடப் பட்டது. மாமல்லன் என வழங்கப்பெற்ற பல்லவ மன்னனால் தோற்றுவிக்கப்பட்ட நகரமாதலினால் அதற்கு மாமல்லபுரம் என்றும், மகாபலிபுரம் என்றும் மக்கள் பெயரிட்டு வழங்கினர். மாமல்லனின் கலை வளத்தைச் சிற்பங்களின் வாயிலாகச் சித்தரித்து, மக்கள் யாவரும் கண்டு களிக்கும் வண்ணம் எழில் அமைந்த கலைக்கூடமாகக் காட்சி அளிக்கும் இம்மகாபலிபுரத்தில் திருமால் சயனத் திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். இறைவன் ஏனைத் திருப்பதிகளில் பாம்பணையிற் பள்ளி கொண்டிருப்பான். ஆனால் இப்பதியில் தலத்தில் பள்ளி கொண்டிருக்கின்றான். ஆகையால், இப்பதியினைக் 'கடல் மல்லைத் தலசயனம்' என்றும் மக்கள் சொல்லுவர்.

நரசிம்மவர்ம பல்லவனின் கலை மாண்பினை விளக்கும் கலைக்கோயிலாக உள்ள இம்மகாபலிபுரத்தில் மல்லிகைப் புதரின் நடுவில் நீலோற்பல மலரில் (கி.பி. 7-ஆம் நூற்றுண்டில்) சித்தாத்திரி ஆண்டு ஐப்பசித் திங்கள் வளர்பிறையில் அமைந்த நவமி திதியில் புதன்கிழமையன்று அவிட்ட நட்சத்திரத்தில், திருமாலின் ஐம்படைகளில் ஒன்ருகிய கௌமோதகி என்னும் கதாயுதத்தின் அமிசமாகப் பூதத்தாழ்வார் அவதரித்தருளினுர்.

பூதத்தாழ்வாரின் மனம் திருமாலின் திருவடிகளேயே நாடியது. எனவே, அவர் இவ்வுலக வாழ்க்கையைச் சிறிதும் விரும்பவில்லை. அவர், மனக்கோயிலில் திருமாலை அமைத்து அவ்விறைவனை ஞானநீர்கொண்டு ஆட்டி, அப்பெருமான் திருவடிகளில் அன்பாகிய மலரை இட்டு, என்றும் அவனை ஆராதிப்பார். அவர் திருமாலின் திருவடிகட்குச் செந்தமிழ்ப் பாக்களால் ஆயினவும், என்றும் வாடாத வளம் பெற்ற நிலையில் அமைந்தனவுமாகிய செஞ்சொற்களால் ஆன பாமாலையைச் சாத்தியதால், 'யானே ஏழ்பிறப்பும் தவம் உடையேன்' என்று கூறுவார். 'திருமாலைச் செங்கண் நெடியானை எங்கள் பெருமானைக் கைகூப்பி வணங்கப் பெற்றேனுதலின், யான் இனி ஒரு குடைக்கீழ் மண்ணுலகை ஆள்வதையும் வேண்டேன்; தேவர்கட்கும் தேவனுய்த் தேவருலகை ஆள்வதையும் வேண்டேன்' என்று சொல்லுவார். அவரைக் கண்டவர்கள், 'இவர் நம்மைப்போன்ற மக்கட் பிறப்பினர் அல்லர்; தெய்வப் பிறப்பினர்' என்று வணங்கித் துதிப்பார்கள். இங்ஙனம் கண்டோர் அனைவரும் பாராட்டி வணங்கிப் போற்றும் உண்மை அறிவுச் செல்வராய்ப் பூதத்தாழ்வார் விளங்கினுர்.

பூதத்தாழ்வார் பாடியருளிய இரண்டாம் திருவந்தாதியில்,

''யானே தவம்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவம்உடையேன் எம்பெருமான்—யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது''

என்னும் செய்யுள் ஒன்றாகும். இச்செய்யுளின்கண் அவர், தாம் நல்லவராக ஆயினமைக்கு உரிய காரணத்தைக் கூறியுள்ளார்.

இவரால் பாடப்பட்ட பெருமை பொருந்திய நகரங்கள்: (1) திருவரங்கம், (2) தஞ்சை, (3) திருக்குடந்தை, (4) திருமாலிருஞ்சோலைமலை, (5) திருக்கோட்டியூர், (6) திருத்தண்கால், (7) திருக்கோவலூர், (8) திருக்கச்சி, (9) திருப்பாடகம், (10) திருநீர்மலை, (11) திருக்கடன்மல்லை, (12) திருவேங்கடம், (13) திருப்பாற்கடல் முதலியனவாகும்.

3. பேயாழ்வார்

தொண்டை நாட்டில், சென்னையைச் சார்ந்து சிறந்து விளங்கும் செல்வர்கட்கும், கலையறிவிற் சிறந்த அறிஞர்கட்கும் இருப்பிடமாகவும், சைவ வைணவர்களின் கோயில்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தலமாகவும், தமிழகத்தின் பொது மறை என யாவராலும் போற்றிப் புகழப்படும் தெய்வமறையாம் திருக்குறளை உலகிற்கு உதவிய திருவள்ளுவரின் திருக்கோயில் கொண்டு திகழும் தலமாகவும், செல்வர்கள் பலர் பூம்பொழில்களோடு கூடிய பெரிய பெரிய மாளிகைகளை அமைத்துக்கொண்டு வாழ்வதற்கு வகையுள்ள உறைவிடமாகவும் விளங்குவது திருமயிலை என்னும் நகரமாகும்.

இத்தகைய சீரும் சிறப்பும் ஒருங்கமைந்த திருமயிலை என்னும் இந்நகரத்தில், வைணவர்களின் திருக்கோயிலாகத் திகழும் ஆதிகேசவப் பெருமாள் கோயிலின் திருக்கிணற்றில், செவ்வல்லி மலரின்கண் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டில்) சித்தாத்திரி ஆண்டு ஐப்பசித் திங்கள், வளர்பிறையில் (சுக்கில பட்சம்) பொருந்திய தசமி திதியில் வியாழக்கிழமையன்று சதய நாளில் எம்பெருமானின் ஐம்படைகளுள் ஒன்றாகிய நாந்தகம் என்னும் வாளின் அமிசம் உடையவராய்ப் பேயாழ்வார் அவதரித்தருளினார்.

பேயாழ்வார் மனம் இளமையிலேயே கல்வியில் சென்று பதிந்தது. எல்லா நூற்பொருள்களும் அவருக்கு இனிது விளங்குவனவாயின. அவரது மனம் காந்தத்தில் ஊசி சென்று பொருந்துவதுபோலத் திருமாலின் திருவடித் தாமரைகளில் சென்று பொருந்தி அவற்றிலேயே நிலைத்துவிட்டது. அதனுல் அவர் எப்பொழுதும் அருந்தமிழ்ப் பாக்களால் பரமன் புகழினைப் பாடிப் பாடி, அதனுல் களிப்பு மிக்கவராய் ஆடி ஆடித் திரிவார். அவரைக் கண்டவர்கள், 'இவர் கருவிலேயே ஞானமாகிய திருவுடையராய் அவதரித்தவர்; மெய்ஞ்ஞானச் செல்வர்' என்று போற்றுவார்கள்; 'அவரை வணங்கினுல் நாம் மக்கட் பிறப்பை எய்தியதனுல் அடைதற்குரிய பயனை அடைவோம்' என அவருடைய திருவடிகளை வணங்குவார்கள். இவ்விதம் கண்டோர் அனைவரும் வணங்கும் வாய்ப்புடையவராய் விளங்கினுர் பேயாழ்வார்.

அவர் பாடியருளிய மூன்றும் திருவந்தாதியில்,

'' தொட்ட படைஎட்டும் தோலாத வென்றியான்
அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று—குட்டத்துக்
கோள்முதலை துஞ்சக் குறித்தெழுந்த சக்கரத்தான்
தாள்முதலே நங்கட்குச் சார்வு''

என்னும் பாடல் ஒன்று. திருமாலின் திருவடிகளே மக்கட்குப் பற்றுக்கோடாகும் என்னும் கருத்தினை அப்பாடல் பகர்கின்றது.

இவரால் பாடப்பெற்ற தலங்கள்: *(1)* திருவரங்கம், *(2)* திருக்குடந்தை, *(3)* திருவிண்ணகர், *(4)* திருமாலிருஞ் சோலைமலை, *(5)* திருக்கோட்டியூர், *(6)* அட்டபுயகரம், *(7)* திருவேளுக்கை, *(8)* திருப்பாடகம், *(9)* திருவெஃகா, *(10)* திருவல்லிக்கேணி, *(11)* திருக்கடிகை, *(12)* திருவேங்கடம், *(13)* திருப்பாற்கடல், *(14)* பரமபதம் முதலியனவாகும்.

முதலாழ்வார்கள் கூடுதலும், அந்தாதி பாடுதலும்

முதலாழ்வார்கள் என மக்களால் போற்றிப் புகழப் படும் பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய மூவரும் சம காலத்தவர்கள். அவர்கள் மாந்தருடன் கூடியிருத்தற்கு மனம் இயையாதவர்களாய், ஒருவரை ஒருவர் அறியாமல், ஒரு நாள் இருந்த ஊரில் மறு நாள் இராமல், ஊர் ஊராய்ச் சென்று இறைவனைச் சேவித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இங்ஙனம் இருக்கையில் இறைவன் இம்மூவரையும் சேர்ப் பித்தல் வேண்டும் எனத் திருவுளங் கொண்டு, திருக்கோவ லூருக்குச் செல்லவேண்டும் என்னும் எண்ணத்தை இம் மூவருக்கும் உண்டாக்கியருளினான். அதனால் இம்மூவரும் தனித் தனியாகத் திருக்கோவலூருக்குச் சென்று, அத்தலத்தில் உள்ள திருமகள்நாதனைச் சேவித்தார்கள்.

உலகத்து உயிர்களை உறங்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்த மாலைப் பொழுதும் வந்தது. எங்கும் இருள் கவிந்தது. இம் மூவருள் பொய்கையார் முதற்கண் ஒரு வைணவருடைய அழகிய இல்லத்தை அடைந்து, அவ்வில்லத்தின் இடைகழி யில் அந்த இல்லத்தாரின் இசைவு பெற்றுப் படுத்துக் கொண்டார். பின்பு பூதத்தாரும் பொய்கையார் பள்ளி கொண்டிருக்கும் வீட்டை அடைந்து, படுக்க இடம் கிடைக்கு மோ என வினவ, அதனைச் செவிமடுத்த பொய்கையார் பூதத்தாரிடம் தாம் தங்கியுள்ள இடத்தில், 'ஒருவர் படுக்க லாம்; இருவர் இருக்கலாம்' என்று கூறி அவரையும் அவ் விடத்திற்கு எழுந்தருளும்படி அழைக்க, பூதத்தாரும் அவ் வாறே செல்ல அவ்விருவரும் அங்கு அமர்ந்தனர். அப் பொழுது ஆண்டவனின் அடியவராகிய பேயாரும் அங்குச் சென்று படுத்துக்கொள்ள இடம் கேட்க, பொய்கையார் பேயாரை நோக்கி, 'இங்கு உள்ள இடத்தில் ஒருவர் படுக்க லாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்' எனக் கூறி அவரையும் அழைப்பித்துக்கொண்டார். எனவே, முதலாழ்

வார்களாகிய அம்மூவரும் அங்கு நிற்கலாயினர். பின்னர் அவர்கள் ஒருவரை ஒருவர் உசாவி உணர்ந்துகொண்டு, மிக்க மகிழ்ச்சியுடையவர்களாய் உரையாடிக்கொண்டிருக்கும் காலத்தே, திருமாலும் அவர்கள் நிற்கும் இடத்தின் இடையில் அவர்களோடு தாமும் ஒருவராய்ச் சென்று நின்றுகொண்டு, அவர்கட்கு நெருக்கத்தை உண்டாக்கினர்; வெளியிலும் செல்லமுடியாத பெருமழையையும் உண்டாக்கி அருளினர்.

இறைவரால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கத்தினை ஞானச் சுடர் விளக்கின்மூலம் அறிந்த ஆழ்வார்கள், அவரது அழகிய மேனியை அகக்கண்களால் கண்டு, தம் தூய்மை பொருந்திய எண்ணத்தினுல் திருமாலின் தெள்ளிய இயல்பினைத் தெவிட்டாத தீந்தமிழில் அவனியில் உள்ளோர் உய்யும்பொருட்டு அந்தாதிப் பாடலாக அறிவிக்கத் தொடங்கினர். முதற்கண் பொய்கையார்,

''வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று''

எனத் தொடங்கி,

''ஓரடியும் சாடுதைத்த ஒண்மலர்ச் சேவடியும்
ஈரடியும் காணலா மென்னெஞ்சே—ஓரடியில்
தாயவனைக் கேசவனைத் தண்துழாய் மாலைசேர்
மாயவனை யேமனத்து வை''

என முடியும் நூறு பாட்டுக்களைக் கொண்ட ஓர் அந்தாதியைப் பாடியருளினுர். பொய்கையாழ்வார் முதற்கண் ஆரம்பித்து அந்தாதி பாடியதால் இவரது அந்தாதி முதல் திரு அந்தாதி என வழங்கப்பட்டது.

பின்பு, பூதத்தார் இரண்டாவதாக இறைவன்மீது இரண்டாம் திரு அந்தாதி என வழங்கும் நூறு பாடல்களை,

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

என்ற பாடல் ஆதியாகவும்,

"மாலே நெடியோனே கண்ணனே—விண்ணவர்க்கு
மேலா வியன்துழாய்க் கண்ணியனே—மேலால்
விளவின்காய் கன்றினல் வீழ்த்தவனே—என்றன்
அளவன்ருல் யானுடைய அன்பு"

என்ற பாடல் அந்தமாகவும் அமையப் பாடினர்.

மூன்ருவதாகப் பேயாழ்வார் பரமனின் பான்மையைப் பறை சாற்றும் பரந்த உள்ளத்துடன், தாம் கண்ட காட்சியை முதலிருவர் போன்றே அந்தாதியாகப் பாட அவா உள்ளவராய், திருமாலின் கோலத்தைத் தெரிவிக்கும் எண்ணத்தவராய் முதற்கண்,

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னுழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னுழி வண்ணன்பால் இன்று"

என்ற பாடலைப் பாடி, அந்தாதியின் நூருவது செய்யுளாக,

"சார்வு நமக்கென்றும் சக்கரத்தான் தண்துழாய்த்
தார்வாழ் வரைமார்பன் தான்முயங்கும்—காரார்ந்த
வான்அமரும் மின்னிமைக்கும் வண்தா மரைநெடுங்கண்
தேன்அமரும் பூமேல் திரு"

என்ற பாடலையும் பாடிப் பரந்தாமனின் பண்பினை மூன்றுந் திரு அந்தாதியாக மொழிந்தார்.

இங்ஙனம் முதலாழ்வார்கள் மூவரும் திருக்கோவலூரில் கூடிப் பரமனைச் சேவித்து அந்தாதி பாடினர்கள்.

4. திருமழிசையாழ்வார்

''தொண்டை நன்னுடு சான்ருேருடைத்து'' என்று தமிழகம் தழைக்க நீதி நூல் வகுத்த ஔவையாரால் பாராட்டப்பெற்ற தொண்டை நாட்டில், கடலுக்கு மேற்கில் காஞ்சீபுரத்திற்குக் கிழக்கில் ஓர் தலம் உளது. அது பூமிக்கு அணியாக விளங்குவது. திருமழிசை என்று பெயர் பெற்ற அப்பதி அந்தணர்கள் பரிவுடன் பயிலும் வேத ஒலிகளைக் கொண்ட தலமாக மட்டுமன்றி, பார்க்கவர் என்னும் முனிவர் திருமாலைக் குறித்து, ''தீர்க்க சத்திர யாகம்'' செய்யும் இடமாகவும் அமைந்திருந்த காலத்தே, அம்முனிவரது மனைவியார் கருவுற்றுப் பன்னிரண்டு திங்கள் கழித்து (கி.பி. 7-ஆம் நூற்ருண்டு) சித்தாத்திரி ஆண்டு. தைத் திங்கள் தேய்பிறையில் (கிருஷ்ண பட்சம்) பொருந்திய பிரதமை திதியில் ஞாயிற்றுக் கிழமை அன்று மக நட்சத்திரத்தில் திருமாலின் ஆழி அமிசமாய், கை கால் முதலிய உறுப்புக்கள் இல்லாத ஒரு பிண்டத்தைப் பெற்றெடுத்தார். பார்க்கவ முனிவரும் அவர் மனைவியாகிய கனகாங்கி என்னும் தேவமாதும் மன வருத்தம் கொண்டு அப்பிண்டத்தை ஒரு பிரம்புப் புதரின்கீழே போட்டுவிட்டுப் போனுர்கள். பிறகு ஆழியங்கையனுகிய திருமால் திருமகள் சமேதராய் அவண் எழுந்தருளி அப்பிண்டத்தை அன்புடன் நோக்கி அருள் புரிய அதனுல் அப்பிண்டம் ஓர் அழகிய ஆண் மகவாகும் உறுப்புக்கள் அமையப்பெற்றது. இஃது,

'' சிக்கென்று சின்னக்கால் சீருடைப்பின் கண்ணுயிராய்
ஒக்கஉறுப் பாய்ந்தறிவார் உண்ணிறைந்தான்''

என்கிறபடியே, எல்லா அவயவங்களும் அமைந்த அழகுள்ள ஆண் குழவியாகி அழத் தொடங்கிற்று.

இறைவனின் திருவருளால் உயிர் அமையப்பெற்று, பசி தாகங்களில் ஈடுபட்டு, மக்கள் இல்லாத பிரம்புப் புதரில் அழுதுகொண்டிருந்த அக்குழந்தையின்முன் எம்பெருமான் எழுந்தருளி, இவருடைய பசி தாகம் தீரும்படி அருள்பாலித்து,

ஆராவமுதான தம் திருக்கோலத்தைக் காட்டி மறைந்தார். குழந்தையாகிய திருமழிசையாழ்வாரும் அவரை விட்டுப் பிரிந்து ஆற்றமாட்டாமல் மீண்டும் அழத் தொடங்கினர்.

அங்கு அப்பொழுது, திருவாளன் என்றொருவன் பிரம்பு அறுக்கப் போய், அவ்விடத்தில் இக்குழந்தையின் அழுகுரலைக் கேட்டுத் தேடிச் சென்று அக்குழந்தையைக் கண்டு மிக்க மகிழ்ச்சியுடன் அதனை எடுத்து, பெற்றோர்கள் எங்கேனும் உளரோ எனத் தேடிப் பார்த்தான். அங்கு ஒருவரும் காணப் பட்டிலராதலைக் கண்ட அவன் 'மகப்பேறு இல்லாத குறையைத் தீர்க்கக் கருதிய திருமகள் நாதன் இக்குழவியை நமக்களித்தனன்' என்னும் உவகை கொண்டு, இல்லம் நோக்கிச் சென்று, தனது மனைவியான பங்கயச் செல்வியார் கையில் கொடுத்து, கிடைத்த வரலாற்றையும் அவளிடம் கூறினன்.

அந்நங்கை நல்லாளும் அக்குழந்தையை அன்புடன் வாங்கி முத்தமளித்து, தானே பெற்றவர் எனக் கண்டோர் கூறும் தன்மையில் மார்புடன் மகிழ்வோடு அணைத்துக்கொள்ள, அவள் மார்பிலும் பால் சுரந்தது. ஆயினும், அப்பாலை மகவு உண்டிலது. இக்குழந்தையாகிய திருமழிசையாழ்வார் பாலுண்ணல் முதலானவற்றில் ஆசையற்று, எம்பெருமானுடைய குணங்களையே தாரகமாகவுடையராய் பேசுவது அழுவது ஒன்றுமின்றி, சிறுநீர் கழித்தல் முதலியனவுமில்லாமல், எல்லா உறுப்புக்களும் பரிபூரணமாகப் பெற்றவராய் எழுந்தருளியிருந்தார்.

இத்தகு வியப்பான செய்தியைக் கேட்டு, திருமழிசையில் வாழ்பவரும், திருமகள்நாதன்பால் பேரன்பு உடையவரும், கற்றுணர்ந்தவருமான ஒரு முதியவர், அக்குழவிக்குக் கொடுக்கப் பாலைக் காய்ச்சி எடுத்துக்கொண்டு வந்து அம்மகவின்முன் வைத்து, ''இதை அமுது செய்தருளவேண்டும்'' என்று வேண்ட, அக்குழவியும் அப்பாலமுதை அருந்திற்று. அதனைக் கண்ணுற்ற பங்கயச் செல்வியாரும் திருவாளனும், நாள் தோறும் பாலமுது கொணர்ந்து பாலகனைப் பருகுவிக்கச் செய்யவேண்டும் என்று அம்முதியவரைப் பரிவுடன் வேண்ட,

அம்முதியவரும் அவ்வாறே நாள்தோறும் தம்முடைய மனைவி யாரோடு பாலமுதைக் கொணர்ந்து அக்குழவியை உண்பிக்க, அவ்வருமை மகவும் அப்பாலை உண்டு வந்தது. ஒரு நாள் இவர்களது எண்ணத்தை அக்குழந்தை அறிந்து, அன்று அவர்கள் கொணர்ந்த பாலமுதில் சிறிது நிற்கும்படி வைத்து எஞ்சியதை உண்டது. இதனை அம்முதியவர்கள் அருந்த, அவர்கள் இளமைப் பருவத்தினையுடையவர்களாகி, பின் அவரது மனைவியார் கர்ப்பவதியாகிப் பத்துத் திங்கள் நிறைந்தபின், ஒரு ஆண் மகவைப் பெற்றுள். அப்பிள்ளைக் குக் கணிகண்ணன் எனப் பெயரிட்டு, மக்களுக்கு மாட்சி யளிக்கும் கலைகள் யாவற்றையும் அவர்கள் கற்பித்தார்கள்.

பார்க்கவ முனிவருக்கும் அவரது மனைவியாகிய கன காங்கிக்கும் மகவாகி, திருவாளன், பங்கயச் செல்வி ஆகிய இருவரின் செல்வ மைந்தராகி, திருமழிசை என்னும் தலத்தில் அவதரித்த காரணத்தினுல் திருமழிசையாழ்வார் என்ற திருநாமத்தோடு வளர்ந்த இவர், ஏழு ஆண்டுகள் கழிந்தபின், அஷ்டாங்க யோகம் புரியும் கருத்தினர் ஆகி, அதற்குப் பரம்பொருளின் தியானம் இன்றியமையாதது என நூல்களின் வாயிலாக உணர்ந்தார். உலக காரணனுக விளங்கும் பரம்பொருளாம் முதற்பொருருளின் தத்துவத்தை உணரப் பற்பல சமயங்களிலும் புகுந்து ஆராயவேண்டு மென்னுங் கருத்தினைக் கொண்ட அவர் சாக்கியம், சமணம் என்னும் சமயங்களில் உள்ள நூல்களை ஓதியுணர்ந்தார். ஆனுல், அவற்றில் பசையில்லாமல், பின் சைவ சம யத்தை அடைந்து, சிவவாக்கியர் என்னும் திருநாமத்துடன் சைவராய் விளங்கி அச்சமய நூல்களை ஆராய்ந்தவாறே அவர் பல தலங்களுக்குச் சென்று, சிவபிரானைச் சேவித்து விட்டுத் திருமயிலையை அடைந்தார். அங்குப் பூஞ்சோலை யில் இருந்த பேயாழ்வார், சிவவாக்கியர் என்ற பெயருடன் சைவராக விளங்கும் திருமழிசையாழ்வாரைத் தடுத்தாட் கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துடன் அவரிடம் மரங்கள் தோன்றுவற்கு விதை காரணமாக இருப்பதுபோல் சத்துவ குணம் உடைய பொருள் எதுவோ அதுவே உலகத்து எல்லாப் பொருள்களின் தோற்றத்திற்கும் காரணமாகின்ற

முதற் பொருள் ஆகும் என்ற உண்மையினை உணர்த்தினர்; மேலும், அம்முதற்பொருளை உணர்ந்து அடைந்து வீடு பெறுதலே ஞானத்தின் பயன் ஆகும் என்று எண்ணம் சிவவாக்கியரின் மனத்தில் எழச் செய்து, அத்தகைய முதற்பொருளாய் விளங்கி முத்தி நிலை அளிக்கும் முதல்வன் திருமகள்நாதனாகிய திருமாலே என்று நிலைநாட்டி இதர சித்தாந்தங்கள் நிலையற்றவை என்றும் விளக்கினர். இவ்வாறு சைவராக இருந்து, சைவ மதத்தில் சிவவாக்கியர் என்னும் பெயருடன் விளங்கிய திருமழிசையாழ்வாருக்குப் பேயாழ்வார் நாராயணனின் திருமந்திரத்தை முறைப்படி உபதேசிக்க, திருமழிசையார் ஸ்ரீவைணவர் ஆனார்.

திருமழிசையாழ்வார் ஜகந்நாதனான ஸ்ரீமந் நாராயணனைத் தியானம் செய்துகொண்டு திருமழிசையில் உள்ள ''கஜேந்திர ஸரஸ்'' என்னும் குளத்தின் கரையில் பல்லாண்டுகள் யோகத்தில் எழுந்தருளியிருந்தார்.

பிறகு திருமழிசைப் பிரானர் அவ்விடத்தினின்றும் அகன்று ஒரு மலைக்குகையை அடைந்து, அங்கு யோகத்தில் அமர்ந்திருந்தார். அந்நிலையில் பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் ஆகிய முதலாழ்வார்கள் மூவரும் பல தலங்களுக்களுக்குச் சென்றுவருகையில், ஓரிடத்தில், இவ்வுலகில் காணப்படாததாகிய பேரொளியைக் கண்டு வியப்பெய்தி, 'இதை ஆராயக் கடவோம்' என்று எங்கும் திரிந்து வந்து குகையில் எழுந்தருளியிருந்த பக்திசாரரை நெஞ்சென்னும் உட்கண்ணால் கண்டுகொண்டு, அவரை நோக்கி, 'பார்க்கவரின் அருந்தவப் பேறானவரே! தங்கள் நலம் பொலிந்து விளங்குகின்றதோ?' என்று கேட்டார்கள். திருமழிசையார், 'தாமரை, குருக்கத்தி, செவ்வல்லி என்னும் முப்பூக்களும் உலகில் புகழ் எய்த வந்த மெய்ஞ்ஞானச் செல்வர்களே! உங்கள் அருள் நலம் பெற்றவனாகிய என் நலம் பொலிந்து விளங்குதற்குத் தடையாவது யாதுளது?' என்றார். அவர்கள் அன்பின் மிகுதியால் கண்களில் நீர் மல்க ஒருவரையொருவர் ஆலிங்கித்துக்கொண்டு, மிகவும் பக்தியுடன் யோகத்தில் எழுந்தருளியிருந்து பின்பு யாவரும் திருமயிலைக்கு எழுந்தருளி, பேயாழ்வார் திருவவதரித்தருளின கைரவ தீர்த்தத்தின் கரையில் சில காலம்

யோகத்தில் எழுந்தருளியிருந்தனர். பின் முதலாழ்வார்கள் மூவரும் திருமழிசைப் பிரானிடம் விடை பெற்றுக்கொண்டு அவரை அரிதிற் பிரிந்து சென்றார்கள்.

பின்பு ஆழ்வார் தம்முடைய திருவவதாரத் தலமான திருமழிசைக்கு எழுந்தருளி, சாத்துகைக்குத் திருமண் வேண்டி கல்விச் சோதித்த இடத்தில் திருமண் அகப்படாமல் வருந்தித் துயில் கொள்ள, அவரது கனவில் திருவேங்கடநாதன் எழுந்தருளி, திருமண் உள்ள இடத்தைக் குறிப்பிட்டுக் கூறியருளினன். இவரும் அங்கே திருமண் கண்டு எடுத்துப் பன்னிரண்டு திருநாமம் அணிந்துகொண்டு,

''ஆல நிழல்கீழ் அறநெறியை நால்வர்க்கு
மேலை யுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன்—ஞாலம்
அளந்தானை ஆழிக் கிடந்தானை ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கு மாறு''

என வணங்கினர்.

இப்படியாகச் சில நாள் சென்ற பின்பு, கச்சியில் உள்ள திருவெஃகாவுக்குச் சென்று, அப்பதியில் அரவணையில் துயில் அமர்ந்துள்ள இறைவனைச் சேவித்து, பொய்கையாழ்வார் அவதரித்தருளின பொய்கைக் கரையில் தியானம் செய்து கொண்டு, யோகத்தில் எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்தில் இவரருளால் பிறந்த கணிகண்ணர் வந்து, இவருடைய திருவடிகளில் வணங்கி, அவர் திருவருளைப் பெற்று, அவருக்குச் சீடர் ஆகிடப் பல தொண்டுகள் செய்து வரலாயினர்.

அப்பொழுது அங்கு வாழ்ந்து வந்த ஒரு முதியவள் திருமழிசையாழ்வாரின் மாட்சியை உணர்ந்து வந்து, நாள் தோறும் அவர் உள்ள இடத்தை அலகு கொண்டு தூய்மைப் படுத்திக் கோலமிட்டு அலங்கரித்து வரலானள். ஒரு நாள் ஆழ்வார் யோகத்திலிருந்து திருக்கண்களை விழித்துப் பார்த்து, முதியாள் செய்யும் தொண்டிற்குகந்து, அம்முதியவளை நோக்கி, 'உனக்கு வேண்டியதைக் கேள். ஒரு வரம் தருகிறேன்'

என்றருளிச் செய்ய, அவளும் ஆழ்வாரைக் குறித்து, 'அடியேனுக்கு இக்கிழத்தனம் போகும்படி அருள் பாலிக்கவேண்டும்' என்ன, ஆழ்வாரும், 'அப்படியேயாகக் கடவது' என்று அவளுக்கு அருள, தேவமாதர்களும் 'இவ்வுரு பொற்பாவையோ? பொன்தானோ?' என்று ஐயுறும்படி அவளும் அழகு மிக்க இளநங்கையாகிப் பக்திசாரரை வணங்கித் தன் இருப்பிடம் அடைந்தாள். அவளது அழகைக் கண்ணுற்ற பல்லவ வேந்தன் அவளது அழகில் மனத்தைப் பறி கொடுத்து ஏக்க முற்றவனாய் உறக்கமின்றி அவளையே எண்ணி, பின் அமைச்சர்கள் மூலம் அவளது விருப்பத்தையும் அறிந்து, அவளைத் தனது கருத்திற்கிசைந்த மனைவியாகப் பெற்றான். பல்லவராயனும் நாளுக்கு நாள் கிழத்தனத்தை அடையலானான். பின் ஒரு நாள் மனைவியிடம் அவளுக்கு ஆழ்வாரால் ஏற்பட்ட அருளை உணர்ந்தான். கணவனாகிய காவலனுக்குத் தனக்கு இளமைத் தன்மை ஏற்பட்ட வரலாற்றினை உணர்த்தியதோடு அமையாத அம்மையார், 'ஆழ்வாரின் சீடரும், நாள்தோறும் அரண்மனைக்குப் பிச்சை ஏற்றற்காக வருகின்றவரும் ஆகிய கணிகண்ணரின் துணை கொண்டு ஆழ்வாரின் அருளைப் பெறுவீராயின் தங்களுக்கும் இளம்பருவம் எய்தும்' எனக் கூறினாள்.

அங்ஙனமே அம்மன்னனும் மறுநாள் கணிகண்ணர் வந்ததும் அவரிடம் அவரது குரவரை அழைத்துக்கொண்டு வர வேண்டும் என்று வேண்ட, அதற்கவர், 'எம் குரவர் எவர் மனைக்கும் வாரார்' என்ன, அரசன், 'அங்ஙனமாயின் நீரே நம்மீது ஒரு பாட்டுப் பாடுதல் வேண்டும்' என்று கேட்டான். அதற்குக் கணிகண்ணர், 'யான் வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியல்லேன்' என்ன, அரசன் அவரை நோக்கி, 'திருமாலின் அமிசம் பெற்றவர்கள் அரசர்களாதலினால் அரசரைப் பாடுதல் குற்றமாகாது; ஆதலினால் பாடுதல் வேண்டும்' என்று வற்புறுத்திக் கூறினான். கணிகண்ணரும்,

'' ஆடவர்கள் எங்ஙன் அகல்வார் அருள்சுரந்து
பாடகமும் ஊரகமும் பாம்பணையும்—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் பொழிற்கச்சி மாண்பு''

என்று பாடினுர். அரசன் கணிகண்ணரை நோக்கித் திரு மாலைப் பாடியதன் காரணத்தை வினவ, அதற்குக் கணி கண்ணனுர் அரசனிடம், 'தாங்களே அரசர்கள் திருமாலின் அமிசம் என அறிவித்ததால் திருமாலைப் பாடுவதும் அரசரைப் பாடுவதே அன்ருே? ஆதலின் திருமாலைப் பாடினேன்' என்ருர். மன்னன் அதனைச் செவியேற்றுச் சினங்கொண்டு, 'இன்றே நீர் நமது நகரைவிட்டுச் செல்வீராக' எனக் கடிந்து கூறினுன்.

கணிகண்ணரும் சடக்கெனப் புறப்பட்டுத் தமது குரவ ரான பக்திசார முனிவராகிய திருமழிசையாழ்வார் முன் சென்று வணங்கி, நடந்த செய்தியை அறிவித்து, 'அடியேன் இவ்விடத்தினின்றும் விடை கொள்ளுகிறேன்' என்று கூற, ஆழ்வாரும் அவரிடத்து, 'நானும் எம்பெருமானை எழுப்பிக் கொண்டு வருகின்றேன். அதுவரையிலும் இங்கு இருப்பீர்' என்று சொல்லிக் கோயிலுக்குச் சென்று, அரவணைச் செல்வ னுகிய வைகுந்தவாசனை நோக்கி,

'' கணிகண்ணன் போகின்ருன் காமருபூங் கச்சி
மணிவண்ணு நீகிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்''

என்று பாடினுர். அப்பெருமானும் திருமழிசையார் பின்னுல் தம் பைந்நாகப் பாயைச் சுருட்டிக்கொண்டு எழுந்தருள, மற்றும் அத்தலத்து ஆலயங்களில் பொருந்தியுள்ள தேவர் களும் பின்தொடர எழுந்தருள்கின்ற காலத்து, அக்காஞ்சிமா நகரம், கோசல நாட்டுக் குரிசில் கானகம் நோக்கிச் செல்கின்ற காலத்து இராமனைவிட்டுப் பிரிந்தமையால் எழில் இழந்த அயோத்தியைப்போன்று பொலிவு அற்று இருள் சூழப் பெற்றது. அந்நகரக் காவலனுகிய பல்லவராயன் அமைச்சர் களை அழைப்பித்துத் தனது நகரம் பொலிவிழந்து காண்பதற் குக் காரணம் கேட்க, அமைச்சர்களும் ஒற்றர்கள்மூலம் நிகழ்ந்த செய்தியை அறிந்து அரசனுக்குக் கூறினர். அரசனும் மிக வருந்தி அமைச்சர்கள் முதலியவருடன் கணிகண்ணரைத் தேடிச் சென்று, அவரது காலில் விழுந்து வணங்கி, அறியா

மையால் தான் கூறிய கொடுமொழியைப் பொறுத்து மீண்டும் கச்சிப்பதிக்கு எழுந்தருளவேண்டும் என வேண்டினார். கணிகண்ணரும் திருமழிசையாழ்வாரை மீண்டும் எழுந் தருளவேண்டும் என வேண்ட, ஆழ்வாரும் வைகுந்த நாதராகிய சொன்னவண்ணம் செய்த பெருமாளைப் பார்த்து,

> ''கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
> மணிவண்ணா நீகிடக்க வேண்டும்—துணிவுடைய
> செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
> பைந்நாகப் பாய்படுத்துக் கொள்''

என்று விண்ணப்பம் செய்ய, திருமாலும் தேவர்களுடன் மீண்டும் கச்சிப்பதியை அடைந்து, தம் பைந்நாகப் பாயை விரித்துப் பள்ளி கொண்டருளினார். அம்முதல்வன் கணிகண்ணர் முதலியவர்களுடன் சென்று ஓர் இரவு தங்கிய இடத்திற்கு 'ஓரிரவிருக்கை' என்பது பெயராயிற்று. காஞ்சி நகரம் முற்றும் முன்போல் பொலிவுற்று விளங்கியது. அரசன் முதலான அனைவரும் மகிழ்வெய்தினார்கள். திருமழிசையாழ் வாரும் அவ்விடத்திலே பின்னையுஞ் சில காலம் யோகத்தில் எழுந்தருளியிருந்தார்.

பின்பு திருமழிசையாழ்வார், வைகுந்தமாநகரைத் தரத் தக்க பெருமையுடைய கும்பகோணம் என்னும் திருக் குடந்தையில், ஏரார் கோலம் திகழக் கிடக்கும் ஆராவமுதனைக் கண்டு சேவிக்க எண்ணமுடையராய், காஞ்சியினின்றும் எழுந்தருளும்பொழுது, இடையில் உள்ள பெரும்புலியூர் என்கிற கிராமத்தில் சென்று, ஒரு திண்ணையில் எழுந்தருளி யிருந்தார். அத்திண்ணையிலேயிருந்து வேதம் ஓதிக்கொண்டிருந்த பார்ப்பனர்கள் இவரைக் கண்டு, 'நான்காம் வருணத்தினனாகிய இவன் கேட்க நாம் வேதம் ஓதுதல் தகாது' என எண்ணித் தவிர்ந்திருக்க, ஆழ்வாரும் அவர்கள் கருத்தை அறிந்து திண்ணையை விட்டிறங்கினார். மறையவர்கள் உடனே வேதம் ஓதத் தொடங்கி, விட்ட வாக்கியம் தோன்றாமையால் தவறித் தடுமாற, ஆழ்வாரும் அதைக் கண்டு, கருநெல்லை நகத்தால் பிளந்து குறிப்பால் காட்டியருள, பின்பு அவர்களுக்கு

விடுபட்ட வாக்கியம் தோன்றி, அவர்கள் தெளிந்து வந்து ஆழ்வாரை வணங்கி, பிழையைப் பொறுத்தருள்க என வேண்ட, பக்திசாரரும் அவர்களுக்குப் பல இன்மொழிகளைக் கூறி விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

பின்னர் அப்பதியில் பக்திசாரர் பிச்சை ஏற்றுச் செல்லுங்காலத்து, அவ்வூர்த் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் இவ்வாழ்வார் எழுந்தருளுகிற திருவீதிகள்தோறும் தம் திருமுகத்தைத் திருப்பி அருளுவார் ஆயினர். இந்தச் செயலை அக்கோயில் அர்ச்சகராகிய நம்பியார் கண்டு, சில பார்ப்பனருக்குக் காட்டினர். அவர்கள் அந்தக் கிராமத்தில் யாகம் செய்யும் பெரும்புலியூர் அடிகளுக்கு யாகசாலையில் சென்று இவரது பெருமையைக் கூற, அவரும் உடனே அங்கு வந்து, பக்திசாரரை யாக சாலைக்கு எழுந்தருளவேண்டும் என்று வணங்கிப் போற்றி விண்ணப்பம் செய்து அழைத்துச் சென்று உபசரித்துச் சிறந்ததோர் பீடத்தில் வீற்றிருக்கச் செய்தார். பின்னர் யாகத் தலைவர் யாகத்தில் செய்யும் அக்கிர பூசையை ஆழ்வாருக்குச் செய்யுங்காலத்து, வேள்விச் சடங்கர்கள் பக்திசாரரை இழிவுபடுத்திப் பேச யாகத் தலைவர் ஆழ்வாரை நோக்கி, 'இவர்கள் இப்படிப் பேச நான் கேட்க மாட்டேன்' என்று மிகவும் வருந்தி விண்ணப்பம் செய்தார். ஆழ்வாரும் அச்சடங்கர்களுக்கு நல்லறிவு உண்டாகும்படி செய்தல் வேண்டும் என்ற எண்ணத்துடன் எம்பெருமானை எண்ணி,

''அக்கரங்கள் அக்கரங்கள் என்றுமாவ தென்கொலோ
இக்குறும்பை நீக்கியென்னை ஈசனுக்க வல்லையேல்
சக்கரங்கொள் கையனே சடங்கர்வா யடங்கிட
உட்கிடந்த வண்ணமே புறம்பொசிந்து காட்டிடே''

என்று பாடியருளினர். திருமாலும் யாவரும் காணும்படி ஆழ்வாருடைய திருமேனியில் திருப்பாற்கடலின்கண் 'தாம் பள்ளிகொண்டுள்ள காட்சியைக் காண்பிக்க பக்திசாரரும் அச்சாரூப நிலையைப் பெற்று யாவரும் காண இருக்கும்படி அருளினர். முன்பு கண்டபடி பேசிய சடங்கர்கள் எல்லோரும்

இக்காட்சியினால் உள்ளம் மாறி ஆழ்வாரது திருவடிகளில் விழுந்து வணங்கி, ஆழ்வாரே அக்கிர பூசைக்கு உரியவர் எனப் பன் முறை போற்றி, தாம் செய்த செயல்களை மன்னித்தருளுமாறு வேண்டினர். பக்திசாரரும் அவர்களுக்குப் பல நன்மொழி களைக் கூறி, பெரும்புலியூர் அடிகளிடத்தும், அவர்களிடத்தும் விடை பெற்றுக்கொண்டு திருக்குடந்தைக்கு எழுந்தருளினார்.

திருக்குடந்தை என்னும் கும்பகோணத்தை அடைந்த ஆழ்வார் ஆராவமுதனைச் சேவித்து, பின் தாம் அதுவரையில் பாடிய பாசுரங்களையெல்லாம் காவிரி நீரில் விட்டார். அவற்றுள் நான்முகன் திருவந்தாதிப் பாசுரங்களும், திருச்சந்த விருத்தப் பாசுரங்களும் எதிர்த்து வர, அவற்றை எடுத்துக் கொண்டு ஆராவமுதனைச் சேவித்தார்; பிறகு அவ்விரண்டு நூல்களையும் உலகத்திற்கு உதவி அப்பதியில் பல்லாண்டுகள் எழுந்தருளியிருந்தார் என்று சொல்லப்படுகிறது. இங்ஙனம் திருமழிசையாழ்வார், அன்ன ஆகாரங்களை விட்டு, காய் கிழங்குகளைச் சிறிது அமுது செய்து, நெடுங்காலம் நானிலத்தில் நாடுய்யும் நல்வழியினைப் பாசுரங்கள்மூலம் உணர்த்தியருளினார் என்பர் அறிஞர் இவருடைய பாசுரங்கள் யாவும் தத்துவப் பொருளை உணர்த்துவதோடு, வைகுந்தநாதனின் அன்பை உண்டாக்கி, இயற்கை வருணனைகள் எழிலாக அமையப் பெற்று பொருட் செறிவும், மிடுக்கும், இன்பமும் வாய்ந் தனவாய் விளங்குகின்றன.

திருமழிசையாழ்வாரால் பாடப்பெற்ற பாடல் தலங் கள்: *(1)* திருவரங்கம், *(2)* அன்பில், *(3)* திருப்பேர் நகர், *(4)* கும்பகோணம், *(5)* கவித்தலம், *(6)* திருக் கோட்டியூர், *(7)* திருக்கூடல், *(8)* திருக்குறுங்குடி, *(9)* திருப் பாடகம், *(10)* திருவூரகம், *(11)* திருவெஃகா, *(12)* திரு வெவ்வுளூர், *(13)* திருவேங்கடம், *(14)* திருப்பாற்கடல், *(15)* துவாரகை, *(16)* பரமபதம் முதலியனவாம்.

5. நம்மாழ்வார்

இந்நிலவுலகம் சீரும் சிறப்பும் பெற்றுச் சிறந்த முறையில் விளங்குவதற்கு ஏற்றவாறு, இவ்வுலகத்தை நிலைப்படுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகிலா விளையாட்டுடையவனும், வேண்டுதல் வேண்டாமை இலாதானும், மலர்மிசையேகினனும், தனக்குவமை இல்லாதானும், அறவாழி அந்தணனும் ஆகிய இறைவனுடைய நிலையினை ஆன்மாக்கள் அடைதற்கு ஏற்ற மெய்ப்பொருளை உலகத்திற்கு உணர்த்துவான் வேண்டி, அவற்றினை இனிது விளக்கிக் கூறும் உண்மைப் பொருள் உரைக்கும் நூல்களுள் நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய தமிழ் வேதமே முதன்மையானதாகும்.

நம்மாழ்வார் அவதரித்த நாடு பாண்டிய நாடு ஆகும். ஔவையாரால் ''பாண்டியா, நின்னுடைத்து நல்ல தமிழ்'' என்று போற்றிப் புகழப்பட்ட பாண்டிய நாட்டில் திருக்குருகூரில் சதுர்த்த வருணத்தில் (கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்) பிரமாதி ஆண்டு வைகாசித் திங்கள் பன்னிரண்டாம் நாள் வளர்பிறையில், பௌர்ணமி திதியில், வெள்ளிக்கிழமை அன்று விசாக நட்சத்திரத்தில் கடக லக்னத்தில் சேனை முதலிகள் அமிசராய் நம்மாழ்வார் அவதரித்து அருளினார்.

இவ்வாழ்வாருடைய ஏனைத் திருநாமங்கள் காரிமாறன், மாறன், சடகோபன், பராங்குசன், குருகைப்பிரான், திருக்குருகூர் நம்பி, வகுளாபரணன், அருள்மாறன், தென்னரங்கன் பொன்னடி, திருநாவீறுடைய பிரான் என்பனவாகும். இவரது தகப்பனார் பெயர் காரியார் ஆகும். காரியாரது தகப்பனாராகிய பொற்காரியார் திருவண்பரிசாரத்தில் வாழ்ந்தவரும், குடி, குணம், ஒழுக்கம், அன்பு முதலியவற்றால் தம்மோடு ஒத்தவரும், வேளாளர் குலச் செல்வரும் ஆகிய திருவாழ்மார்பரது அருந்தவச் செல்வியாகிய உடைய நங்கையாரைக் காரியாருக்கு இல்வாழ்க்கைத் துணைவியாக்கினார்.

பொற்புருமங்கையும், அருங்குணச் செல்வியும், கற்புடை நல்லாளும், கணவனைத் தொழுதேத்தும் பெண்பாலும் ஆகிய இவ்வுடைய நங்கையார், தம் கணவராகிய காரியாருடன் திருக்குறுங்குடியை அடைந்து, அப்பதியில் எழுந்தருளியிருக்கும் நம்பியைச் சேவித்து வணங்கி, பலவகையாகப் போற்றி, 'மக்கட் பேறு உண்டாகும்படி எம்பெருமான் அருள் புரிய வேண்டும்' என வேண்டினர். அதனால் உதித்த புதல்வரே உண்மைப் பொருள் உணர்த்திய செம்மலாம் நம்மாழ்வார் ஆவார்.

அருங்குணச் செல்வராக அவதரித்த நம்மாழ்வாராகும் மைந்தன், பால் உண்டிலன்; அழுதிலன்; மலர்க் கண் திறந்திலன்; ஆயினும் திருமேனி மெலிந்திலன்.

பிற்காலத்தில் நம்மாழ்வார் திருவாக்கினின்றும் ஒழுகிய தமிழ் அமிழ்தும், அதன் கருத்துச் சுவையுமே அவருக்கு அப்பெயரைத் தந்தன. அன்பில் ஆர்வமுடையார் அனைவரும் அவரை 'நம் அறிஞர்', 'நம் அன்பர்' என்று துதிப்பார்கள். அத்தகைய சான்றுண்மைக் குணம் படைத்தவரது திருவாக்கை ஓதும் வாய்ப்பைப் பெறுங் கிறிஸ்துவர், இஸ்லாமியர், பௌத்தர், சமணர், சைவர், வைணவர் முதலிய எல்லாச் சமயத்தவரும் அவரை 'நம் சமயத்தவர்', 'நம் சமயத்தவர்' எனப் போற்றுவர். பாவன்மையுடையவர் அவரைப் பாவலர் எனவும் தத்துவ ஆராய்ச்சியினர் அவரை 'நம் தத்துவ மூர்த்தி' எனவும் தழுவுவர். ஒரு நாட்டவர்க்கோ, ஒரு சமயத்தவர்க்கோ, ஓரினத்தார்க்கோ மட்டும் உரியவராகாமல், எல்லா நாட்டவர்க்கும், எல்லாச் சமயத்தவர்க்கும், எல்லா இனத்தவர்க்கும் உரியவர் ஆகும் பேற்றினை அடையும் ஆற்றல் அமையப்பெற்றவராக விளங்கப்போகும் அவர், பிள்ளைத் தன்மையில் பால் உண்ணுமலும், அழாமலும், அசையாமலும், மலர்க் கண்கள் திறவாமலும் இருந்தமை வியத்தகு செயலாகவும், பெற்றோர்க்கு எல்லை கடந்த வருத்தத்தைத் தரும் செயலாகவுமே இருந்தன.

ஆழ்வார் அவதரித்தற்கு முன்னதாக ஆதிசேடன் அப்பதியின் திருக்கோயிலின்கண் ஒரு புளிய மரமாய்த்

தோன்றி விளங்கலானுன். உலகம் உய்ய அவதரித்த ஆழ் வாருக்குத் திருமகள் நாதன் ஞானமாகிய அமுதத்தை ஊட்டியருளிச் சென்றனன். அதனுல் ஆழ்வார் உலகத்தில் பிறக்கும் குழந்தைகளின் செயலினின்றும் வேறுபட்ட நிலையில் வைகுந்தவாசனின் திருவடிகளையே தமது திரு வுள்ளத்தில் கொண்டிருப்பாராயினுர். இதனை அறியாத பெற் ேறார்களின் வருத்தம் எல்லை கடந்ததாயிற்று.

அழகிய நம்பி என்பவர், தாம் இயற்றியருளிய குரு பரம் பரை என்னும் நூலில், நம்மாழ்வாரின் பெற்றேருக்கு ஏற் பட்ட வருத்தத்தைப்பற்றிக் கூறும் செய்யுட்கள் கல்லையும் நெகிழ்வித்துக் கரையச் செய்வன; படிப்போர் மனத்தைப் பாகாய் உருக்குவன.

உடைய நங்கையார் வருந்துதலைக் கண்ட காரியார் மிக்க வருத்தம் அடைந்து, அவ்வூர் திருக்கோயிலுக்கு எடுத்துச் சென்று இறைவன்முன் குழந்தையைக் கிடத்தி, அதற்கு 'மாறன்' என்னும் திருநாமத்தைச் சூட்டி, அப்பெருமானைச் சேவித்து வணங்கிப் போற்றிக் குழந்தைக்கு அருள் புரிய வேண்டினுர்கள்.

வைகுந்தத்தில் பாம்பணையில் பள்ளி கொண்டு, அறி துயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவன் அப்பொழுது சேனை முதலியாரை நோக்கி, 'நீவிர் மாறனுகிய நம்மாழ் வாருக்கு உண்மைப் பொருள்களை யெல்லாம் உபதேசித்து வருவீராக' எனப் பணிக்க, அங்ஙனமே அவர் திருக்குருகூருக் குச் சென்று பிறர் அறியாதபடி ஆழ்வாருக்குத் தத்துவப் பொருள்களை உபதேசிக்கவும், அதனை உணர்ந்துகொண்டு ஆழ்வார் அக்கோயிலின்கண் உள்ள புளிய மரத்தின் அடியிலே பதினுறு ஆண்டுகள் வரையிலும் யோகத்தில் எழுந்தருளியிருந் தார்.

அங்ஙனம் நம்மாழ்வாராகிய சடகோபர் யோகத்தே இருந்தகாலையில், பாண்டிய நாட்டில் அமைந்த திருக் கோளூர் என்னும் பதியில் அந்தணர் குலத்து அருந்தவச் செல்வராய்த் தோன்றிய மதுரகவியார் அயோத்தி, மதுரை,

கயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்று கூறப்படும் புண்ணிய நகரங்கள் ஏழினையும் சேவிக்கும் உள்ளத்தராய்ச் சென்று சேவித்து வருவாராயினுர். அவர் அயோத்தியில் இருந்தகாலத்துத் தென்திசைக்கண் சிறந்ததொரு பேரொளி தோன்ற, அவ்வொளியைத் தரிசிக்கும் நோக்கத்தவராய்த் தென்திசை நோக்கி, ஒளியின்வழி வருவாராயினுர். இரவில் மட்டும் தோன்றிப் பகலில் மறைந்த அப்பேரொளியின் வழி நடந்த மதுரகவியார் கோதாவரியாற்றையும், திருவேங் கடத்தையும், தொண்டை நாட்டையும், திருவரங்கத்தையும், கடந்து திருக்குருகூரையும் அடைந்தார். அவ்வொளி அவ் வூர்க் கோயிலினுட்புக்கு மறைந்துவிட்டது. பின்னர் அப் பதியில் உள்ளார் சிலரை நோக்கி, 'இங்கு விசேடம் யாதே னும் உண்டோ?' என்று அவர் வினவினுர். அவர்கள் நம் மாழ்வாருடைய அவதாரச் சிறப்பை மதுரகவியாருக்குக் கூறினுர்கள். மதுரகவியாரும் கோயிலினுட் சென்று, பதினுறு கலைகளும் நிரம்பிய மதியெனப் பொலியும் திருமுகத்தினராய், யோகத்தில் எழுந்தருளியிருந்த ஆழ்வாரை அணுகி, தம் இரண்டு கைகளையும் நன்ருய் ஓசையெழுமாறு தட்டினுர். உடனே ஆழ்வார் கண்திறந்து மதுரகவியாரை நோக்கினுர்.

மதுரகவியார் ஆழ்வாரை நோக்கி, 'உயிரற்றதாகிய பிரகிருதியினுல் ஆகிய உடம்பில் அணு வடிவாயுள்ள ஆன்மா வந்து புகுந்தால் எதனை அனுபவித்துக்கொண்டு எவ்விடத்தில் இன்பம் உண்டென்று எண்ணியிருக்கும்?' என்ற பொருள் அடங்கிய, ''செத்தத்தின் வயிற்றிற் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?'' என்று கேட்டார். அதற்கு ஆழ்வார், ''அந்த உடலின் தொடர்பினுல் ஆகும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் இவ்வைந்தினுல் வரும் இன்ப துன்பங்களை அநுபவித்துக்கொண்டு அவ்விடத்தி லேயே 'இன்புற்றேன்; இளைத்தேன்' என்று சொல்லிக் கொண்டே கிடக்கும்'' என்ற பொருள் அடங்கும்படி, ''அத்தை தின்று அங்கே கிடக்கும்'' என்று திருவாய்மலர்ந்தருளினுர். உடனே மதுரகவியார் அவருடைய திருவடிகளிலே தம் முடைய முடியுற வணங்கிக் கைகூப்பி, நின்று, ''அன்புடையீர், அடியேனை ஆட்கொண்டருள்வீர்'' என்று வேண்டினுர்.

உடனே நம்மாழ்வார் மதுரகவியாரைப் பார்த்து, ''நாம் பகவானை அனுபவித்தற்குப் போக்குவீடாகச் சொல்லும் பாசுரங்களால் நீர் பட்டோலையை அலங்கரிப்பீராக'' எனத் திருவாய்மலர்ந்தருள, மதுரகவியாரும் பட்டோலையை அலங்கரிக்க, நம்மாழ்வாரும் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி எனும் நான்கு தமிழ் மறைகளை அருளினர். நான்கனுள் திருவிருத்தத்தை இருக்கு வேதசாரம் என்றும், திருவாசிரியத்தை யசுர் வேதசாரம் என்றும், பெரிய திருவந்தாதியை அதர்வண வேதசாரம் என்றும், திருவாய்மொழியைச் சாம வேதசாரம் என்றும் கூறுவர். உலகு உய்யச் சொல்மலர்களாகிய பாமாலைகளால் பரந்தாமனைப் பாடிய நம்மாழ்வார் திருப்புளியடியில் முப்பத்தோராண்டு எழுந்தருளியிருந்தார்.

இவரிடம் பட்டோலையை அலங்கரித்த மதுரகவி ஆழ்வார் வைகுந்தநாதனைப் பாடாமல் மதுரமானதும், அன்பு நிறையப் பெற்றதுமான பதினொரு பாசுரங்களால் நம்மாழ்வாரைப் பாடியுள்ளார். நூல் இயற்றப் புகுவோர் முதலில் விநாயகருக்கு வணக்கம் கூறுதலைப் போன்று, இவ்வாழ்வாருக்கும் வணக்கம் கூறுதல் மரபாயிற்று.

வைணவப் பெரியார்கள் வைணவக் குரவர்களை ஆழ்வார்கள் எனவும், ஆசாரியர்கள் எனவும் இரு திறத்தினராக வகுத்துள்ளார்கள். இவ்வாழ்வார் அவ்விரு திறத்தினரினும் சேர்ந்தவராவர். ஆழ்வார்களுள் இவரை அவயவி (உறுப்பி) எனவும், ஏனைய ஆழ்வார்களை இவருக்கு அவயவங்கள் (உறுப்புகள்) என்றும் கூறுவார்.

இனி ஆசாரியர்கள் வரிசையைப் பார்ப்போமாயின், முதல் மூவரும் பரமபதத்தைச் சார்ந்தவர்களாகவும், புவியைச் சார்ந்த ஆசாரியர்களின் பட்டியலில் நம்மாழ்வாரே முதல் ஆசாரியராகவும் அமைந்துள்ளார்.

ஆசாரியர்களின் வரிசை பின்வருமாறு:

1. திருமால்.
2. திருமகள்.
3. சேனை முதலியார்.
4. நம்மாழ்வார்.

5. நாதமுனிகள். 8. ஆளவந்தார்.
6. உய்யக்கொண்டார். 9. பெரிய நம்பி, திருக்கச்சி நம்பி.
7. மணக்கால் நம்பி. 10. இராமாநுசர்.

இவருக்கு விழுமிய பெருமையை. அளித்தற்குக் காரணமாயிருந்த இவருடைய அருளிச்செயல்கள் நான்கு எனவும், அவை வேதத்தின் சாரமாகக் கருதப்படுகின்றன எனவும் முதற்கண் கூறியுள்ளோம். அவற்றுள் கா ணும் பாசுரங்களின் எண்ணிக்கையை ஈண்டு காண்போம்:

1. திருவிருத்தம் நூறு பாசுரங்களைக் கொண்டது.
2. திருவாசிரியம் ஏழு பாசுரங்களைக் கொண்டது.
3. பெரிய திருஅந்தாதி எண்பத்தேழு பாசுரங்களைக் கொண்டது.
4. திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டு பாசுரங்களைக் கொண்டது.

வைணவர்களின் தமிழ் வேதமாகிய நாலாயிரத்துள் முதல் மூன்றும் மூன்றும் ஆயிரத்துள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. திருவாய்மொழி நான்காம் ஆயிரமாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

நம்மாழ்வாருடைய பாடல்களில் இறையுணர்வு, அன்பு, இன்பம், பொதுமையின் சிறப்பு, கவிதையின் எழில் முதலிய காணப்படும்.

நம்மாழ்வாரால் பாடப்பெற்ற பாடல் தலங்கள்: (1) திருவரங்கம் (2) திருப்பேர்நகர் (3) கும்பகோணம் (4) திருவிண்ணகர் (5) திருக்கண்ணபுரம் (6) திருமாலிருஞ்சோலைமலை (7) திருமோகூர் (8) திருக்குருகூர் (9) ஆழ்வார் திருநகரி (10) ஸ்ரீவரமங்கை (11) திருப்புளிங்குடி (12) திருப்பேரை (13) ஸ்ரீவைகுந்தம் (14) வரகுணமங்கை (15) பெருங்குளம் (16) திருக்குறுங்குடி (17) திருக்கோவலூர் (18) திருவநந்தபுரம் (19) திருவண்பரிசாரம் (20) திருக்காட்கரை (21) திருமூழிக்களம் (22) திருப்புலியூர் (23) திருச்செங்குன்றூர்

(24) திருநாவாய் (25) திருவல்லவாழ் (26) திருவண்வண்டூர் (27) திருவாட்டாறு (28) திருக்கடித்தானம் (29) திருவாறன் விளை (30) திருவேங்கடம் (31) திருவயோத்தி (32) துவாரகை (33) வடமதுரை (34) திருப்பாற்கடல் (35) பரமபதம் முதலியனவாகும்.

6. மதுரகவியாழ்வார்

பைந்தமிழும் பல வளமும் அமைந்து விளங்கும் பாண்டிய நாட்டில் குறைவற அமைந்ததாகிய திருக்கோளூர் என்னும் ஊர் ஒன்று உளது. அவ்வூரில் வாழ்வோர் யாவரும் கல்வி யறிவிலும் செல்வத்திலும் சிறந்து விளங்கி, நல்லொழுக்கத்தி னின்றும் பிறழாதவர்களாக இருந்தார்கள்.

இத்தகைய சிறப்போடு வாழ்ந்த மக்களுள் முன் குடிமிச் சோழிய அந்தணர் மரபினரும் இருந்தனர். அம்மரபில் அதனை விளக்கும் மணிவிளக்காய் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்) ஈசுவர ஆண்டு சித்திரைத் திங்கள் வளர் பிறையில் பொருந்திய சதுர்த்தசி திதியில் வெள்ளிக்கிழமை யன்று சித்திரை நட்சத்திரத்தில் ஸ்ரீவைநதேயாம்சராய் மதுரகவியாழ்வார் திருவவதரித்தருளினர்.

இவர் தமிழ் மொழியிலும், வடமொழியிலும் சிறந்த புலமை பெற்று, சிறந்த ஒழுக்கம், திருமாலிடம் அன்பு, அருள் முதலியன தம்மிடம் வாய்க்கப்பெற்றவராயிருந்தார். தமிழ் மொழியில் மதுரமான கவிதைகளைப் பாடிய காரணம்பற்றி இவருக்கு மதுரகவிராயர் என்னும் பெயர் அமைந்துள்ளது.

மதுரகவியாழ்வார், புண்ணியப் பதிகள் என வழங்கும் 1. அயோத்தி 2. மதுரை 3. கயை 4. காசி 5. காஞ்சி 6. அவந்தி 7. துவாரகை என்னும் ஏழையும் சென்று சேவித்து, மறு படியும் அயோத்தியை அடைந்து, அங்கு அர்ச்சாவதார

வடிவாய் எழுந்தருளியிருக்கின்ற இராமபிரானையும். பிராட்டி யையும் சேவித்துத் திருவடி தொழுதுகொண்டு அங்கு வசிக்க லானார்.

ஒரு நாளிரவில் இவர் திருக்கோரூர் எம்பெருமானைத் திசை நோக்கித் தொழக் கருதித் தென்திசையில் கண் செலுத்திய பொழுது, அப்பாகத்திலே வானுற வளர்ந்து விளங்கிய ஒரு திவ்யமான பேரொளியைக் காணுற்று, அஃது இன்ன தென்றறியாமல், ‘கிராம நகரங்கள் வேகின்றனவோ? காட்டுத் தீயோ?’ என ஐயுற்றுத் திகைத்து நின்றார். இங்ஙனமே அடுத்த இரண்டு மூன்று நாட்களிலும் கணடு, அச்சுடர்த்திரள் முச்சுடரொளியிலும் மிக்கு விளங்கியதானல் பெருவியப்புற்ற அவர், அதனைக் காணும் அவாவினராய்ப் புறப்பட்டு அச் சோலையைக் குறியாகக் கொண்டு நெடுவழி கடந்து நடந்து திருக்குருகூரை அடைந்தார். அவ்வொளி அப்பகுதியில் பொலிந்து நின்ற பிரான் திருக்கோயிலுக்குட்புக்கு மறைந்துவிட்டது. மதுரகவியார் அவ்வூரிலுள்ளாரைப் பார்த்து, ‘இங்கு ஏதேனும் சிறந்த செய்தி உண்டா?’ என வினவ அவர்கள் ஆழ்வாரது வரலாற்றைக் கூறினார்கள். மதுரகவியார் அவ்வரலாற்றைக் கேட்டுக் கோயிலினுள்ளே சென்று, முன் நம்மாழ்வார் வர லாற்றிற் கூறியபடி, ஆழ்வார் அருளைப் பெற்று, அவர் அருளிச் செயல்களைப் பட்டோலையில் எழுதினர். மதுரகவியாழ் வாருக்கு நம்மாழ்வார் பாசுரங்களில் பற்று ஏற்பட்டது. மதுரகவியார் நம்மாழ்வாரையே பதினொரு பாசுரங்களால் ஆன பாமாலை ஒன்றுற் பாடினார். அப்பாமாலையின் முதற்பா ‘கண்ணிநுண் சிறுத்தாம்பு’ எனத் தொடங்குவதால் அதற்குக் ‘கண்ணிநுண் சிறுத்தாம்பு’ என்பது பெயராயிற்று. நம்மாழ்வார் திருநாட்டை அலங்கரித்தபின்னர், அவர் அர்ச்சை வடிவினரான ஆழ்வாரின் உருவத்தைத் திருக் குருகூர் நகரில் எழுந்தருளச் செய்தார்.

மதுரகவியார் ஆழ்வாருக்கு நித்தியம் நைமித்திக விழாக்களையெல்லாம் சிறப்புற நடத்தி வந்தார். அத்திரு விழாக்களில் ‘வேதந்தமிழ் செய்த மாறர் வந்தார்’, திரு மாலுக்குரிய தெய்வப் புலவர் வந்தார்’, ‘அளவிலா ஞானத்து

ஆரியர் வந்தார்' என்பவை முதலாகப் பல விருதுகளைக் கூறித் திருச்சின்னம் முழங்கினர். இதனைக் கேள்வியேற்ற மதுரைச் சங்கத்தாரது மாணுக்கர்கள் எதிரிட்டு, 'உங்கள் ஆழ்வார் பக்தரேயன்றிப் பகவானல்லரே. இவர் சங்கமேறிய புலவரோ? இவர் பாடிய திருவாய்மொழி சங்கமேறிய செய்யுளன்று. இவரை வேதந்தமிழ் செய்தவரென்று புகழ்வது தகுதியோ?' என்று பலவாறு பேசி விருதுகளைத் தடுத்திட்டனர். அதற்கு மதுரகவிகள் மனம் பொறுமல் வருந்தி, 'இவர்கட்கு கர்வபங்கமாகும்படி தேவரீர் செய்தருளவேண்டும்' என்று துதித்தார். சடகோபர் ஒரு கிழப் பார்ப்பனர் வடிவத்தோடு வந்து "திருவாய்மொழியில் 'கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்! எண்ணுந் திருநாமம் திண்ணம் நாரணமே' என்ற பாசுரத்தின் முதலடியை ஒரு சிற்றேட்டில் எழுதிக்கொண்டு சென்று, சங்கப் பலகையின்கண் வைத்தால் அவர்கள் செருக்கு அடங்கும்" என்று கூறியருளினர். அங்ஙனமே மதுரகவி ஆழ்வார் கண்ணன் கழலிணையை எழுதிய ஏட்டை எடுத்துப் போய் வைத்த அளவில், சங்கப் புலவர்கள் ஏறியிருந்த சங்கப் பலகை பொற்றுமரைப் பொய்கையில் மூழ்கி, தன் மேலிருந்த புலவர்களையெல்லாம் நீரில் வீழ்த்தி, உடனே மேலெழுந்து தன்மீது வைத்த சிறு முறியை மாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது.

அப்பொழுது நீரில் விழுந்து அமிழ்ந்து தடுமாறி யெழுந்து மெல்ல நீந்திக் கரை சேர்ந்த சங்கப் புலவர்கள் வேதம், வேதத்தின் முடிவுப் பொருள்கள் முதலானயாவற்றையும் பிறரால் கற்பிக்கப்படாமல் தாமேயுணர்ந்த நம்மாழ்வாரது இறைமை எழில் பொருந்திய வித்தகத் திறனைத் தெரிந்துகொண்டு செருக்கொழிந்தனர். அங்ஙனம் செருக்கொழிந்த சங்கப் புலவர்கள் நம்மாழ்வாரது பெருமையைக் குறித்துத் தோத்திரமாகத் தனித்தனி ஒவ்வொரு பாடல் பாடி வெளியிட்டனர்.

அங்ஙனம் வெளியிட்டதில் அப்பாடல்கள் யாவும்,

"சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
தாமம் பராங்குசமோ நாரணமோ—தாமந்

துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
உளவோ பெரும உமக்கு''

என்ற இப்பாடல் வடிவாகச் சிறிதும் வேற்றுமையின்றி ஒற்றுமைப்பட்டிருக்க, இதுபற்றி அவர்களனைவரும், 'இஃது என்ன விந்தை! இஃது என்ன விந்தை!' என வியப்புக் கடலில் ஆழ்ந்து, பின்னர் இத்தகைய ஒற்றுமைத் தன்மை நேர்தற்கு ஆழ்வாரது தெய்வத் திருவருளே காரணமாகும் என்று எண்ணினர்.

பிறகு சங்கத்துச் சான்றோர்களின் தலைவராக விளங்கும் புலவர், ஆழ்வாரைப் புன்மொழிகளால் இழித்துக் குற்றத்தைப் போக்கிக்கொள்ள வேண்டி,

'' ஈயா டுவதோ கருடற் கெதிரே
இரவிக் கெதிர்மின் மினியா டுவதோ
நாயா டுவதோ உறுவெம் புலிமுன்
நரியா டுவதோ நரகே சரிமுன்
பேயா டுவதோ அழகூர் வசிமுன்
பெருமான் வகுளாபரணன் அருள் கூர்ந்(து)
ஓவா துரையா பிரமா மறையின்
ஒருசொற் பெறுமோ உலகிற் கவியே''

என்ற பாடலைப் பாடினர்.

இங்ஙனம் நம்மாழ்வாரது புலமையின் திறத்தை முற்றும் உணர்ந்த சங்கப் புலவர்கள் ஆழ்வாரது அருந்தமிழ்ப் பாவாகிய மருந்தினுல் தம்முடைய செருக்காகிய நோய் நீங்கப் பெற்று, மதுரகவியாழ்வாருடன் சேர்ந்து விருது கூறல் முதலியவற்றை முன்னிலும் சிறப்பாக நடத்தி வந்தனர்.

மதுரகவி ஆழ்வார் தமது ஆசிரியராகிய நம்மாழ்வாருக்குப் பலவகை விழாக்களையும் ஆராதனைகளையும் நடத்தி வந்ததோடு, ஆழ்வாரது அருந்தமிழ் மறைகளின் பொருள்களைப் பலரும் உணரும்படி உரைத்துச் சிலகாலம் எழுந்தருளியிருந்து, பின்பு சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தான பேரின்பப் பெருவீட்டை அடைந்தார்.

7. குலசேகராழ்வார்

''வேழமுடைத்து மலைநாடு'' என்று ஔவையாரால் பாராட்டப்பெற்ற சேர நாட்டினைச் சேர மன்னர்கள் தமிழகத்தின் தலைமை வேந்தர்களாகத் திகழ்ந்து ஆட்சி புரிந்து வந்தார்கள். அங்ஙனம் ஆட்சி புரிந்த அச்சேர மன்னர் மரபில் திடவிரதன் என்பவன் அன்புக்கும் அருளுக்கும் இருப்பிடமானவனாய்த் தோன்றினான். அவ்வேந்தர்பிரான் கொல்லி நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்தான். அச்சேர மன்னன் திருமகள்நாதனாகிய திருமாலிடத்து அன்புடையோனாய், வீரமும் கொடையும் ஒருங்கமைந்தவனாய் விளங்கினான்.

அவ்வேந்தர் வேந்தனுக்குக் கடலினின்று உதயமாகும் இளம்பரிதி எனக் குலசேகரர் உதித்தார். குலசேகரர் கொல்லி நகரில் (கி. பி. 8-ஆம் நூற்றாண்டு) பராபவ ஆண்டு மாசித் திங்கள் வளர்பிறையில் அமைந்த துவாதசி திதியில் வெள்ளிக்கிழமையன்று புனர்ப்பூச நட்சத்திரத்தில் கௌஸ்துப அமிசராய் அவதரித்தருளினார்.

குலசேகரர் குழந்தைப் பருவத்தில் மழலைச் சொற்களாலும், செங்கீரை ஆடுதலாலும், சப்பாணி கொட்டுதலாலும், சிறுதேர் உருட்டுதலாலும் பெற்றோர்களை மகிழ்வித்தார். இளமைப் பருவத்தில் தென்மொழி, வடமொழி முதலியன நன்கு பயின்று மன்னர்கட்குரிய யானை ஏற்றம், குதிரையேற்றம், வில், வாள் முதலிய படைக்கலப் பயிற்சி முதலியன கற்றுத் தேர்ந்து, 'இவரை ஒப்பாரும் மிக்காரும் இலர்' என்னும்படி சிறந்து விளங்கினார். தந்தையாரும் குலசேகரரின் சீரிய நிலையினைக் கண்டு அவரை இளவரசாக்கினார்.

குலசேகரர் தமது தந்தையாருக்குப்பின் நாட்டின் ஆட்சி முறையை ஏற்றுச் சிறந்த முறையில் செங்கோலோச்சினார். இவரது சிறப்பில் பொறாமை அடைந்த சோழனும் பாண்டியனும் ஒன்றுகூடிப் போர் தொடுத்தனர். அவர்

களைக் குலசேகரர் வென்று தமிழகத்தின் சக்கரவர்த்தியாய் விளங்கினர்.

இதை, ''கொல்லி நகர்க் கிறை கூடல் கோமான்'', ''கொல்லிகாவலன் மாலடி முடிமேல் கோலமாம் குல சேகரன்'' என்ற ஆறு, ஏழாம் திருமொழியினல் உணரலாம்.

பாண்டிய வேந்தன், குலசேகரரது ஆண்மையின் திறத்தை வியந்து, தன் செல்வப் புதல்வியை அவருக்கு மணம் செய்து கொடுத்தான். குலசேகரருக்குள்ள அகப்பற்று, புறப்பற்றினை நீக்கி, வைகுந்தநாதன் அவருக்கு ''மயர்வற மதிநலம்'' அருளி, தனது ''உயர்வற உயர்நலம்'' உடைய வடிவத்தை உணரும்படி கடைக்கணித்தருளினர். இதனல் அவருக்குத் தத்துவம் விளங்கியது. அவர் தம் வாழ்நாட்கள், ''ஊமனர் கண்ட கனவிலும் பழுதாய்க் கழிந்தொழிந்தன'' என்பார்; ''ஆதிமூலமே என்றழைத்த யானையைக் காத்தவனும், சிருங்கிபேரத்துப் புளிஞர் வேந்தனுகிய குகனைத் தனது தோழன் என்றழைத்து, 'என் தம்பி உனது தம்பியாவான்' என்று கூறியவனும், அரசவையில் அரவக்கொடியோனல் அல்லலுற்று அவதிப்பட்ட பாஞ்சாலிக்குப் பொன் ஆடைகள் அருளியவனுமாகிய எம்பெருமானுடைய அருஞ்செயல்களை எண்ணி ஏத்தாது கழித்த நாட்கள் யாவும் பிறந்தும் பிறவாத நாட்கள் ஆகும்'' என்பார்; திருமாலைக் கண்டு களிக்கும் நாள் என்றே என ஏங்குவார். இதனையே அவர் தாம் பாடிய பெருமாள் திருமொழியிலும் நினைவில் கூறுகின்றார்.

பின்னர் இறைவனது நினைவில் ஈடுபட்ட குலசேகரரது மனம், இறைவனது எழில் மிக்க காதையைக் கேட்டலில் விருப்பம் கொண்டது. எனவே, அவர் ஒரு பெரியாரிடத்தில் நாள்தோறும் இராம காதையைக் கேட்பார். அப்பெரியாரும் இராமனது அவதாரத்தையும், விசுவாமித்திரரோடு கானகம் சென்று, தாடகையை வதைத்த இயல்பினையும், அகலிகையின் சாப விமோசனத்தையும், மைதிலியை மணந்ததையும், பரசுராமரது வில்லை வளைத்து மன்னர்களின் பகை

யைப் போக்கியதையும், கேகயன் மகள் சொல்லால் அயோத்தியை விடுத்துக் கங்கையையடைந்து குகனெடு தோழமை பூண்டு, பின் வனம் போய்ப் புக்கதையும் முறையாக நாள் தோறும் கூறிவந்தார். பின்னர் பரதன் வர, பாதுகையளித்து அவனை அனுப்பிவிட்டுச் சித்திரகூடம் சென்றதும், இலங்கை வேந்தனது தங்கை சூர்ப்பனகையினது மூக்கை இலக்குவன் நீக்கியதுமாகிய வரலாறுகளையும் அப்பெரியார் கூறினர்.

அடுத்ததாக, 'சூர்ப்பனகை சினங்கொண்டு கரனிடம் சென்று கூற, கரன் என்னும் இரக்கமிலா அரக்கன் தேரின் மீது ஏறிப் படைவீரர்கள் யாவரும் புடை சூழவும், முரசங்கள் ஒலிக்கவும், யாளிகள், சிங்கங்கள், புலிகள், யானைகள், கரடிகள், பன்றிகள் முதலியவை பூட்டப்பட்ட தேர்களுடன் கடல் பொங்கி எழுந்து வந்தாற்போன்ற இயல்போடு காலனும் கண்டு அஞ்சும்படி இராமலக்குமணர்களை அழிக்க வந்தான். சீதையும் இலக்குவனுமிருக்க, இராமர் தனிமையில் வில்லை வளைத்துப் போர் தொடுக்கப் போர் நிகழ்ந்தது' என மேலும் கதை கூறிய பெரியார் சொல்லிய காலத்து, குலசேகரர் இவை நிகழ்கால நிகழ்ச்சி என்ற எண்ணத்தவராய், தம் படைத் தலைவர்களை அழைப்பித்து, படைகளைத் திரட்டிக்கொண்டு வரும்படி கூறி, தாமும் தேரின்மீது ஏறிச் சென்று இராமருக்கு உதவும் எண்ணத்தவரானர். அரசரது மனநிலையை அறிந்த அமைச்சர் இராமாயணம் கூறுபவரை அழைத்துச் சில செய்திகளைக் கூற, அவரும் அரசன்முன் சென்று, முதற்கண் குலசேகரரது வீரத்தைப் புகழ்ந்து, 'கரனும் அவனது படைவீரர் அனைவரும் சக்கரவர்த்தித் திருக்குமாரரது கணைகளால் அழிவுற்றனர்' எனக் கூறி, 'இரகுநாதன் இளையவனுடனும் சீதையுடனும் பர்ணசாலைக்குள் மகிழ்வுடன் அளவளாவிக்கொண்டிருக்கலானர்' என உரைத்தார்.

குலசேகரர் மனநிலை தெளியப்பெற்றவராய்ப் படைகளை அவ்வவற்றின் இடங்களுக்கு அனுப்புமாறு ஆணையிட்டு அரண்மனைக்குச் சென்றார்.

அரசரது மனநிலை வைணவ பக்தர்களின் சேர்க்கையால் கலங்குதல் கண்டு, அவர்களின் நட்பை அழிக்க அமைச்சர்கள் திட்டம் வகுத்து, குலசேகரர் பூசை செய்யும் பெருமானிடடத்துள்ள நவமணிமாலையை மறைத்தனர். அரசன் வினவிய காலத்து, அமைச்சர்கள் அரசனிடம், 'வைணவர்கள்தாம் எடுத்திருக்கவேண்டும்' என்று கூற, குலசேகரர் அமைச்சர்களின் கூற்றை மறுத்தவராய், ஒரு குடத்தில் நல்ல பாம்பு ஒன்றையிட்டுக் கொண்டுவரச் செய்தார். அங்ஙனமே பாம்பு குடத்தே அடைபட்டு வந்ததும் குலசேகரர், ''வைணவர்கள் எடுத்திரார்கள் என்பது உண்மையாயின் இப்பாம்பு என்னைத் தீண்டாது ஆகுக'' எனக் கூறிக் குடத்தினுட் கையை விட, பாம்பு தீண்டாமலே இருந்தது. குலசேகரர் குடத்தினின்று தம் கையை எடுத்ததும், அப்பாம்பு குடத்தினின்று வெளிவந்து குலசேகரரை வணங்கிப் படம் எடுத்தாடியது. பின்பு, குலசேகரர் அப்பாம்பிற்கு யாதும் தீங்கு செய்யாமல், அதன் இடத்தில் கொண்டுபோய் விடும்படி அதனைக் கொணர்ந்த பணியாளர்களுக்குக் கட்டளையிட்டார்.

அமைச்சர்கள் அரசனிடம் தாங்கள் செய்த பிழையைக் கூறி மன்னிக்குமாறு அரசனின் பாதமலர்களை வணங்கினார்கள். பின்னர் அரசன் அமைச்சர்களை நோக்கி, ''இவ்வுலக வாழ்வில் எனது மனம் ஈடுபடாமல் உள்ளது. இவ்வரசு எனக்கு வேண்டாம்'' என்றுரைத்துத் தமது மூத்த மகனுக்கு முடி சூட்டிவிட்டு, மைந்தர்க்கெல்லாம் கூறவேண்டிய அரசியலறங்களனைத்தும் அறிவித்து, அமைச்சர்களிடமும் அம்மைந்தர்களிடமும் இசைவு பெற்று, திருமாலின் அடியவர்களுடன் இறைவனை நாவுற வாழ்த்தி மகிழலாயினர்.

இவர் பெரிய பெருமாளாகிய இராமனிடத்தில் பேரன்புடையவர் ஆதலினால் இவரைப் 'பெருமாள்' என்றும், 'குலசேகரப் பெருமாள்' என்றும் வைணவப் பெரியார்கள் கூறலாயினர். இவர் அருளிய திருமொழிகளின் தொகைக்கு ''பெருமாள் திருமொழி'' என்னும் பெயர் வழங்கலாயிற்று. இவர் அருளியவை பத்துத் திருமொழிகள். இரண்டு, ஐந்து, ஆறு ஆகிய திருமொழிகள் பத்துப் பாசுரங்களைக் கொண்ட

வை. மூன்ருந் திருமொழி ஒன்பது பாசுரங்கள் உடையது. ஏனைத் திருமொழிகள் ஒவ்வொன்றும் பதினெரு டாசுரங்கள் கொண்டவை. ஆக இவர் அருளிய பாசுரங்களின் தொகை நூற்று ஐந்தாம்.

குலசேகராழ்வாரால் பாடப்பட்ட தலங்கள்: *(1)* திருவரங்கம், *(2)* திருக்கண்ணபுரம், *(3)* திருச்சித்திரகூடம், *(4)* திருவிற்றுவக்கோடு, *(5)* திருவேங்கடம், *(6)* திருவயோத்தி, *(7)* திருப்பாற்கடல் முதலியனவாகும்.

8. பெரியாழ்வார்

பாண்டிய நாடு முத்தும் முத்தமிழும் பெற்றதனுல் பொலிவுற்று விளங்கும் நாடாக உளது. அப்பாண்டிய நாட்டில் புத்தூர் என்னும் ஊரை அடுத்த காட்டில் வாழ்ந்த வேடர் குலத் தலைவனுக்கும், அவனது மனைவியாகிய மல்லிக்கும், வில்லி, கண்டன் என்னும் இரு புதல்வர்கள் பிறந்து, வேட்டையாடுவதில் வல்லவர்களாக இருந்தார்கள்.

ஒரு நாள் வில்லியும் கண்டனும் வேட்டையாடப் புறப்பட்டுச் சென்றனர். கண்டன் புலியைப் பின்தொடர்ந்து சென்று அம்புகள் ஏவியபொழுது, அம்பிற்குத் தப்பிய புலி கண்டனைக் கொல்லவும், பின்னுல் வந்த வில்லி இக்காட்சியைக் கண்டு வருந்தினுன். அவ்வளவில் திருமகள்நாதனின் அருளால் வில்லியின் தம்பி கண்டன் உயிர் பெற்றெழுந்ததோடு, வில்லி பெருஞ்செல்வமும் பெற்ருன். அதனுல் அவன் அந்த இடத்தில் திருமாலுக்கு உயர்ந்த ஒரு கோயிலை எழுப்பினுன்; அக்கோயிலைச் சூழப் பல அழகிய தெருக்களை அமைப்பித்து, அத்தெருக்களில் எழிலார் மாடங்களை உடைய வீடுகளையும் கட்டுவித்தான்; பின்பு புத்தூரில் உள்ளாரை அவ்வூரில் குடியேறச் செய்து, குடியேறியவர்களது ஊராகிய

சேர்த்து, 'வில்லிபுத்தூர்' என்று அத்திருப்பதிக்குப் பெயரிட்டுக் கோயிலின்கண் சிறப்பாகப் பூசை செய்தற்குரிய வழிகளையும் செய்து முடித்தான். அப்பதியைச் சூழ்ந்த இடத்திற்கு 'மல்லிநாடு' என்ற பெயரைத் தனது தாயின் நினைவாக வில்லி பெயரிட, அப்பெயரே அந்நாட்டிற்கு வழங்கப் பெறுவதாயிற்று.

வில்லிபுத்தூரில் குடியேறிய மறையவர்களுள் முகுந்த பட்டர் என்னும் முன்குடுமிச் சோழிய பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் பதுமவல்லி என்னும் மங்கை நல்லாளை மணந்து, இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்தி வந்தகாலத்தே, திருமகள்நாதனின் அருளால் அவருக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அந்த ஆண்மகவே பிற்காலத்தில் போற்றிப் புகழப்படும் பெரியாழ்வார் ஆவார்.

பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் (கி. பி. 9-ஆம் நூற்றாண்டில்) குரோதன ஆண்டு ஆனித் திங்கள், வளர் பிறையில் பொருந்திய ஏகாதசி திதியில் ஞாயிற்றுக்கிழமை அன்று சுவாதி நட்சத்திரத்தில் ஸ்ரீ கருடாமிசராய் அவதரித்தருளினர்.

பெற்றோர் இவருக்கு விட்டுசித்தன் என்ற பெயரை வைத்துத் தக்க வயதில் கல்வி கற்பிக்கத் தொடங்கினர். பின்னர், இவருக்குத் திருமாலுக்குத் தொண்டு செய்வதே சிறந்தது எனத் தோன்றியது. எனவே, மூதாதையர் ஈட்டி வைத்திருந்த பொருட்குவியலினின்றும் ஒரு பெரும்பகுதியைக் கொண்டு நீர்ப்பாங்கான நிலத்தினைத் தேர்ந்தெடுத்து, வேலி வளைத்து அதில் பலவகை மலர்ச்செடிகளையும் பயிரிட்டு, அம்மலர்களால் அழகிய மாலைகளைக் கட்டி, அப்பதியில் உள்ள வடபெருங்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் திருமாலிற்குச் சார்த்தி வருவாராயினர்.

அப்பொழுது பாண்டிய நாட்டில் வல்லபதேவன் என்னும் அரசன் செங்கோலோச்சி வந்தான். அவன் பாண்டியர்தம் குலத்திற்கு ஓர் எழில் மிக்க விளக்குப் போன்றவன், பல கலைகளைத் தேர்ந்தவன். அவன் எல்லாத்

துறைகளிலும் சிறந்து விளங்கினன். எனினும், அவன் அறக்கள வேள்வியிலும் மாட்சிமை அடைய வழி யாது எனச் சிந்தித்து, உண்மைப் பொருளே உணர்தலே அதற்கு வழி என முடிவு செய்தான். அவ்வமயம் வேதவேதாந்தங்களைக் கற்ற செல்வநம்பி என்னும் புரோகிதர் அரசனிடம் வர, அவரை நோக்கி அரசன், 'அந்தமில் இன்பத்தை எவ்வாறு பெறலாம்?' எனக் கேட்டான். அதற்கு மறைவராகிய செல்வ நம்பி, 'வேதமுடிவாகிய பரம்பொருள் இன்னது என்பதை வித்துவான்கள்மூலம் நிச்சயித்து, அவ்வழியாலே பெறலாம்' என்று அறிவிக்க, அரசனும், 'அங்ஙனமே ஆகுக' என்றான். பின்னர் அரசன் தனது அரியணைக்கு முன்புறத்தில் ஒரு தோரணக் கம்பத்தை நட்டு, கிழிச்சீரையிலே பெரும் பொற்குவியலை இட்டு, அப்பொற்கிழியை அக்கம்பத்தில் கட்டித் தொங்க விட்டு, 'தாம் கூறும் உண்மைப் பொருளால் இப்பொற்கிழி தானே அறுந்துவிழும்படி எவர் செய்கின்றாரோ அவருக்கு இப்பொற்கிழி உரியதாம்' என்று எல்லா இடங்களுக்கும் பறையறைந்தும், தூதர்கள் மூலமும் அறிவித்தான். பலர் வந்து சொல்மாரி பொழிந்தும் பொற்கிழி அறுபடவில்லை.

திருமகள்நாதன், விட்டுசித்தர் கனவில் தோன்றி, பாண்டியன் அவைக்குச் சென்று பொற்கிழி தானே அறும் வண்ணம் உண்மைப் பொருளை உணர்த்தும்படி அறிவிக்க, அங்ஙனமே விட்டுசித்தரும் இறைவன் பணியை மேற்கொண்டு, மறுநாள் காலை பாண்டியனது நகர் சேர்ந்தார். பாண்டிய வேந்தனாகிய வல்லபதேவரும், செல்வநம்பியும் சென்று விட்டுசித்தரை வரவேற்றனர். விட்டுசித்தரைக் கண்ட அரசன் வணங்கி, 'அருளிற் சிறப்புடையீர்! தங்கள் வருகையால் என் மனம் மகிழ்ச்சியுற்றது' என்று கூறினன். அரசனது அவையில், அரசன் விட்டுசித்தருக்குச் சிறந்ததோர் இருக்கை ஈந்து அமரச் செய்தான்.

அப்பொழுது அங்கிருந்த புலவர்கள் விட்டுசித்தரை அவமதிக்கும் முறையில் பார்த்து, ''கற்றார் அவையில் சென்று ஒன்றினைக் கூறுதலால் உண்டாகும் இழிவை எண்ணாது வந்தமை, 'குருட்டுக்கண் இருட்டைக் கண்டு

அஞ்சுமோ?' என்ற பழமொழிக்கு ஒப்பாக உள்ளது'' என்று தங்களுக்குள் விட்டுசித்தரைக் குறித்து உரையாடிக்கொண்டனர்.

புலவர்கள் இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கையில், அரசன் குறிப்பின்படி செல்வநம்பி, விட்டுசித்தரை நோக்கி, 'தங்கள் வேதமுடிவாயுள்ள உண்மைப் பொருளை எங்களுக்கு உணர்த்தல் வேண்டும்'' என உரைத்தார்.

வைகுந்தவாசனுகிய திருமாலின் திருவருள் பெற்றதன் காரணமாக அவையின் இடையில் வந்து, அவை வணக்கம் கூறிய விட்டுசித்தர், வேதமுடிவாயுள்ள உண்மைப் பொருளை தம் சொற்கள் கொண்டு விளக்கவுரை ஆற்றினுர். விட்டுசித்தரால் ஆற்றப்பட்ட அவ்விளக்கவுரை, கேட்டார்ப் பிணிக்குத் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாகிய சொற்களால் அமைந்த ஆய்வுரையாகவும், அவரால் கூறப்பட்ட சொற்கள் யாவும், பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுந் தன்மையில்லாமல் விழுமிய பொருள் பொதிந்ததாகவும், உண்மைப் பொருளை உணர்தற்கு ஏற்றதாகவும் இருந்தது. உடனே பொற்கிழி கட்டியிருந்த கம்பம் பொற்கிழி இவர் அருகு வரும்படி வளையலாயிற்று. விட்டுசித்தரும் பொற்கிழியை அறுத்துக்கொண்டார். வேந்தனும், செல்வநம்பியும், ஏனையோரும் விட்டுசித்தரை வணங்கிப் போற்றினர்.

பின்னர் அரசன் கட்டளையினுல் ஏவலர் அந்நகர மாடங்கள்தோறும் கொடிகளை ஏற்றி, தோரணக் கம்பங்கள் நாட்டி, மலர் மாலைகள் கட்டித் தொங்கவிட்டனர். வல்லபதேவனுகிய பாண்டிய மன்னன் விட்டுசித்தருக்கு 'பட்டர்பிரான்' என்னும் பட்டம் வழங்கி, பட்டத்து யானையின்மீது அவரை ஏற்றி, நகர் உலா வரச் செய்தான். விட்டுசித்தர் உலாவிவரும் வீதிகள் யாவும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. 'வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்த பட்டர்பிரான் வந்தார்' என்னும் வாழ்த்தொலிகள் முழங்க, விட்டுசித்தர் வீதிகள்தோறும் உலாவந்த விழா சீரிய முறையில் நடைபெற்றது.

அங்ஙனம் உலாவருதல் நிகழ்ந்தகாலத்து, பரமபதத்தின் தலைவனாக விளங்கும் உலக ரட்சகரான திருமாலனவர் அயன், அரன், இந்திரன் முதலியோர் புடைசூழக் கருடன் மீது இவர்ந்து வந்து, விட்டுசித்தருக்கும் அரசருக்கும் காட்சி யளித்தார்.

முதலும் ஈறும் இல்லாத முதற்பொருள் ஆகியவரும், அமரர்கள் அதிபதியும், உயர்வுற உயர்நலம் உடையவரும், பரமபதத்தில் சித்தரும் முத்தரும் சேவிக்க விளங்கும் பரம் பொருள் ஆனவரும் பீதாம்பரதாரியுமாகிய பரந்தாமனது எழிலைக் கண்ணுற்ற விட்டுசித்தர் என்னும் நாமம் கொண்ட பட்டர்பிரான், அன்பின் மிகுதியினால், இறைவன் எழில் நிலை பெற்றிருக்கும் வகையில் பல்லாண்டு பாடி வாழ்த்து வாராயினார்.

மன்னர் அரசனிடமும் செல்வநம்பியிடமும் விடை பெற்றுக்கொண்டு, வில்லிபுத்தூரை அடைந்த விட்டுசித்தர் கிழியறுத்துக் கொணர்ந்த பொன்னைக் கொண்டு வடபெருங் கோயிலைப் புதுப்பித்து அதனை அங்குள்ள திருமாலுக்கே ஆக்கினார். பின்பு கண்ணனது திருஅவதாரச் சிறப்பினை நாற்பத்து நான்கு திருமொழிகளாகப் பாடினார். இவற்றின் மொத்தப் பாசுரங்கள் நானூற்று அறுபத்தொன்று ஆகும். திருப்பல்லாண்டின் பாசுரங்கள் பன்னிரண்டு ஆகும். ஆக விட்டுசித்தரால் பாடப்பட்ட பாசுரங்களின் எண்ணிக்கை நானூற்று எழுபத்து மூன்று ஆகும். இவருடைய பாசுரங்கள் 'பெரியாழ்வார் திருமொழி' என்று வழங்கப்பட்டு, நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் முதற்கண் அமைக்கப்பட்டுள்ளன.

விட்டுசித்தர் திருமாலைப் பல்லாண்டு பாடி வாழ்த்தின மையால், 'பெரியாழ்வார்' என்று இவரை வைணவப் பெரியார்கள் கூறலாயினர்.

பெற்றோரால் விட்டுசித்தர் என்று வழங்கப்பட்ட

(1) பெரியாழ்வார், (2) பட்டர்பிரான், (3) ஸ்ரீ வில்லிபுத்தூர்கோன், (4) கிழியறுத்தான், (5) புதுவைக் கோன்.

பெரியாழ்வாரால் பாடப்பெற்ற தலங்கள்: (1) திரு வரங்கம், (2) திருவெள்ளாறை, (3) திருப்பேர்நகர், (4) கும்பகோணம், (5) திருக்கண்ணபுரம், (6) திருச்சித்திரக் கூடம், (7) திருமாலிருஞ்சோலைமலை, (8) திருக்கோட்டியூர், (9) ஸ்ரீவில்லிபுத்தூர், (10) திருக்குறுங்குடி, (11) திரு வேங்கடம், (12) திருவயோத்தி, (13) சாளக்கிராமம், (14) வதரியாச்சிரமம், (15) திருக்கங்கைக் கரைக்கண்டம், (16) துவாரகை, (17) வடமதுரை, (18) திருவாய்பாடி, (19) திருப்பாற்கடல், (20) பரமபதம் முதலியனவாகும்.

9. ஸ்ரீ ஆண்டாள்

முன்பு திரேதா யுகத்தில் விதேக நாட்டில் மிதிலை நகரில் ஜனக மன்னன் யாகசாலை அமைத்தற்பொருட்டுக் கலப்பை கொண்டு பூமியை உழுகையில், அவ்வுழுபடைச் சாலிலே ஸ்ரீ தேவியின் அமிசமான ஒரு மகள் தோன்ற, அவளை அவ்வரசன் தன் புத்திரியாகப் பாவித்துச் சீதை யென்று பெயரிட்டு வளர்த்து வந்தான். அச்சீதையை அயோத்தி வேந்தன் தசரதனுக்குக் குமாரனாக அவதாரம் செய்த திருமகள்நாதன் மணந்து, மனைவியைக் காரண மாகக் கொண்டு புவியில் தீயோரைக் கொன்று நல்லோரைக் காத்தார். ஸ்ரீ தேவி புவியில் தோன்றி, புவியிலுள்ள மறச் செயல்கள் மறையவும், அறச் செயல்கள் தழைத்து உலகம் உய்யவும் வேண்டி திருமாலின் அவதாரமாகிய இராகவ னுக்கு இனிய துணைவியானாள்.

அதுபோலவே, பின்பு கலி யுகத்தில் பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் இறைவனுக்கு மலர்

மாலை கட்டித் தருவதற்காக அமைக்கப்பட்ட நந்தவனத்தில் துளசி மலரில் (கி.பி. 9-ஆம் நூற்றுண்டில்) நள ஆண்டு ஆடி மாதம் வளர்பிறையில் சதுர்த்தசி திதியில் செவ்வாய்க் கிழமையன்று பூர நட்சத்திரத்தில் பூமிப்பிராட்டியார் அமிசமாய்ப் பெண் குழந்தை தோன்றியது. அங்ஙனம் அவதரித்த அப்பெண் குழவியை நந்தவனத்தில் பார்த்த பெரியாழ்வார் பெருங்களிப்புக் கொண்டு, அக்குழவியைத் தமது மகளாகப் பாவித்துக் கோதை எனப் பெயரிட்டு வளர்க்கலாயினுர்.

இந்நிலவுலகின்கண் திருமாலடியவர்களாக அவதரித்து, ஆழ்வார்களெனச் சிறப்பித்துக் கூறப்பெறும் பன்னிருவருள், பரமனைப் பக்தியினுலும் நாயகி பாவத்தினுலும் சொல்மலர் களாகிய பாமாலையைச் சுவைபடச் சித்தரித்ததோடு அமை யாது, தாமே நாயகியாக வேண்டும் எனும் எண்ணத்தோடு, அரங்கனை ஆராதித்து, அவனை நாயகனுகவும் அடைந்துய்யும் பேறு பெற்ற செல்வியே இக்கோதையாவாள். வில்லிபுத் தூரார், கோதை என்னும் அப்பெண் குழவிக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்து, பரமஞானத்தைப் போதித் தார்.

தந்தை முதலியோர் கண்டு வியக்கும்படி இளமை தொடங்கி எம்பெருமான் பக்கலிலே பக்திப் பெருவேட்கை கொண்டு, அவனையே தாம் மணஞ்செய்து கொள்ளக் கருதி, அப்பிரானது பெருமைகளையே எப்பொழுதும் சிந்தித்தல், துதித்தல் முதலியன செய்து வாழ்ந்த கோதையார், நாடோறும் விட்டுசித்தர் என்னும் பெரியாழ்வார் வடபெருங்கோயி லானுக்குச் சார்த்துதற்காகக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாத காலத்து எடுத்துத் தம் குழலிலே தரித்துக் கொண்டு அப்பெருமானுக்கு, 'நான் நேரொத்திருக்கின் றேனே'' எனச் சிந்தித்தல் வழக்கம். மாலை சூட்டிக்கொள்ளு தலுடன் சிறந்த அணிகலன்களை அணிந்து, உயர்ந்த பட் டாடையை உடுத்தித் தம்மை அலங்கரித்து, அவ்வொப் பனையழகைக் கண்ணுடியிலே கண்டு, தந்தையார் காணுத வாறு மலர் மாலையைக் களைந்து முன்போலவே செண்டாகச்

சுற்றிப் பூங்குடலையினுள்ளே வைத்துவிடுதல் அவரது தினசரி வழக்கம். இதனை அறியாத ஆழ்வார் அம்மாலையைக் கொண்டு சென்று இறைவனுக்குச் சாத்திவர, பெருமானும் விருப்புடன் அதனை ஏற்றருளினன்.

இங்ஙனம் பல நாட்கள் சென்றபின் ஒரு நாள் வெளியிற் சென்ற ஆழ்வார் விரைவில் வீட்டிற்கு எழுந்தருளிய பொழுது, மலர்மாலையைக் கோதை சூடியிருத்தலைப் பார்த்துக் கோபங்கொண்டு கடிந்துரைத்து, அன்று வடபத்திரசாயியாகிய இறைவனுக்கு மாலை அணியக் கொடாமல், அத்திருப்பணிக்கு முட்டுப்பாடு நேர்ந்ததற்கு மனம் வருந்தியிருந்தார். அற்றை நாளிரவில் இறைவன் ஆழ்வாரது கனவில் வந்து, மாலை கொணராததற்குரிய காரணத்தை வினவி அறிந்து, பின்னர், 'அவள் சூடிக்கொடுத்த மாலையே நறுமணமிக்கு, நமது உள்ளத்திற்கு நனிவிருப்பமானது; ஆதலின் இனி அத்தன்மைத்தான மாலையையே நமக்குக் கொண்டு வருவாய்' என்றருளி மறைந்தனன்.

பின்பு துயில் நீங்கப்பெற்ற விட்டுசித்தர் தமக்கு மகளாக வாய்த்துள்ள கோதை, மலர்மங்கையின் அவதாரம் எனக் கொண்டு அவளுக்கு, 'ஆண்டாள்' என்றும், மாதவனுக்குரிய மலர் மாலையைத் தாம் சூடிக்கொண்டு பார்த்துப் பின்பு கொடுத்தது காரணமாக, 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்றும் திருப்பெயரிட்டு அழைத்துவந்தார்.

ஆண்டாள் தமது பருவம் வளருந்தோறும் இறை அறிவும் பக்திகளும் உடன்வளர்ந்து வரப்பெற்று, தமக்கு ஏற்ற காதலனுகக் கருதிய கடல்வண்ணன் விருப்பமாகக் காதல் அதிகரித்தவராகி, இனி அவனை ஒரு நொடிப் பொழுதும் கூடாதிருக்க முடியாது என்னுங் கருத்துடன் கண்ணனது பிரிவை ஆற்றுத ஆயர் மங்கையர் போலத் தாமும் நோன்பு நோற்று உயிர் தரிப்பவராய், அவ்வெண்ணத்தைத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற திவ்வியப் பிரபந்தங்களின்மூலமாக இறைவனிடத்து விண்ணப்பஞ்செய்து வாழ்ந்திருந்தார்.

இந்நிலையில் பெரியாழ்வார் கோதையாரது மணவினையைப்பற்றிப் பேசத் தொடங்கிய காலையில், ஆண்டாள், 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று சொல்ல, பட்டர்பிரான், 'பின்னை எங்ஙனம் நிகழ்வது?' என்று கேட்க, சூடிக்கொடுத்த சுடர்க்கொடியார், 'யான் பெருமாளுக்கே உரியவளாக இருக்கின்றேன்' என்றுரைத்தார்.

பின்பு கோதையார், தந்தையாகிய பட்டர்பிரானிடம், 'நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் எழுந்தருளியுள்ள இறைவனுடைய பெருமைகளை விளங்க எடுத்துக் கூறியருள வேண்டும்' என வேண்ட, அவரும் அவ்வாறே விரித்துக் கூறினர். அங்ஙனம் அருளிச்செய்து வருகையில்; ஆண்டாள் வடமதுரையில் எழுந்தருளியுள்ள கண்ணபிரானது வரலாற்றைக் கேட்டவளவிலே மயிர்சிலிர்ப்பும், திருவேங்கடமுடையானது வரன் முறையைச் செவிமடுத்தபொழுது முகமலர்ச்சியும், திருமாலிருஞ்சோலைமலையழகரது வடிவழகை அறிந்த மாத்திரத்தில் மனமகிழ்ச்சியும் பெற்று, திரு அரங்கநாதனது பெருமை செவிப்பட்டவுடனே அளவற்ற இன்பமடைந்து நின்றார். அவர்களுள் அரங்கநாதனிடத்தே மனத்தைச் செலுத்தி, அவனுக்கே தம்மை மணமகளாக நிச்சயித்து அவ்வமலனையே எப்பொழுதும் எண்ணியிருந்தார் கோதையார்.

கோதையாருக்குத் திருவரங்கநாதன்பால் உண்டான விருப்ப மிகுதியை அறிந்த பட்டர்பிரான், தமது மகளின் மனம் மகிழ,

'' குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம்நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கைநோக்கிக்
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலும்''

திருவரங்கத்தின் வரலாற்றினைத் தெரிவித்தார்.

கோதையாரும் திருவரங்கநாதனைக் குறித்து,

'' கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ

மருப்பொசித்த மாதவன்றன் வாய்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே''

என்பார். பின் கோதை நாச்சியார் தம் ஆற்ருமை யைத் தணித்துக்கொள்ள எண்ணி வில்லிபுத்தூரை ஆயர் பாடியாகவும், அப்பதியிலிருந்த பெண்களேயும் தம்மையும் ஆயர்குல மங்கையராகவும், வடபெருங்கோயிலே நந்த கோபன் மனேயாகவும், அப்பெருமானேக் கண்ணனுகவும் கருதித் திருப்பாவையைப் பாடியருளிப் பின்பு பதினன்கு திருமொழிகளேப் பாடியருளினர். இதற்கு நாச்சியார் திருமொழி என்று பெயர்.

ஆழ்வாரும், 'நம்பெருமான் இவளேக் கடிமணம் புரிதல் கைகூடுமோ?' என்றெண்ணியிருக்கையில், திருவரங்கச் செல்வன் ஆழ்வாரது கனவில் எழுந்தருளி, ''உமது திரு மகளேக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு வாரும். அவளே யாம் ஏற்போம்'' என்றருளினர். பின்பு திருவரங்கநாதர் கோயிற் பரிவாரமாகியுள்ளவர் கனவிலும் தோன்றி, ''நீவிர் குடை, கவரி, விருந்துகள், வாத்தியங்கள் முதலியன பல சிறப்புக்களுடன் ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் போய், பட்டர் பிரானுருடைய அருமைச் செல்வியாகிய கோதையை அவரது தந்தையாருடன் நம்பால் அழைத்து வருவீராக'' என்று பணித்தருளினன். பிறகு பாண்டிய நாட்டிறையோனுகிய வல்லபதேவன் கனவிலும் தோன்றி, ''நீ பலருடன் ஸ்ரீ வில்லிபுத்தூருக்குச் சென்று, பட்டநாதருடைய மகளாம் கோதையை முத்துப் பல்லக்கில் ஏற்றி நம் திருவரங்கத்திற்கு அழைத்து வருவாயாக'' என்றருளினன். கோதையாரும் தாம் அன்றிரவு பலவகைக் கனவுகளேக் கண்டதாகத் தோழி யிடம் கூறினுள்.

அக்கனவில் திருமணவினேகள் அனேத்தையும் முறையே கண்டதாகப் பத்துப் பாடல்களில் அவர் பாடியுள்ளார். அவற்றுள்,

'' மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்

மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்''

என்பதும் ஒன்று.

பாண்டிய வேந்தன் வல்லபதேவனும் ஏவலாளரைக் கொண்டு, விடியற்காலைக்குள் ஸ்ரீவில்லிபுத்தூரையும் திருவரங்கத்தையும் இணைக்கும் நடுவிலுள்ள நெடுவழியில் தண்ணீர் தெளித்தும், பூம்பந்தரிட்டும், தோரணங்கட்டியும், வாழை கமுகு நாட்டியும் நன்றாக அலங்கரித்து, நால்வகைச் சேனைகளையும் கொண்டு ஆழ்வார் பக்கல் வந்து சேர்ந்து, இறைவன் கூறியவற்றை ஆழ்வாருக்கு உணர்த்தினான். பின்பு கோயிற் பரிவார மாந்தர் பட்டநாதரை வணங்கி, இரவு தம் கனவில் திருவரங்கத்து அமலன் காட்சி அளித்துக் கூறிய செய்திகளை அறிவித்தனர்.

பட்டர்பிரானார் இறைவனது அன்பினை வியந்து பாராட்டினார். பின்னர் மறையவர்கள் பலர் பல புண்ணிய நதிகளினின்று நீரினைக் கொண்டு வந்தார்கள். கோதையாருடைய தோழிகள் அந்நீரினால் கோதையாரை ஆட்டி, பொன்னாடை உடுத்திவிட்டுப் பலவாறு ஒப்பினை செய்தபின், தோழியர் புடைசூழக் கோதையார் சென்று தமக்கென அமைந்த மணிச்சிவிகையில் ஏறினார். ஏனையோர் பல்லக்கிலும், தேர் முதலிய ஊர்திகளிலும் சென்றார்கள். மற்றும் பலர் கோதையாருடைய சிவிகைக்கு முன்னும் பின்னுமாக நடந்து சென்றார்கள்.

இங்ஙனம் திருவரங்கம் நோக்கிச் சென்ற காலத்துப் பலர், ''ஆண்டாள் வந்தாள்! சூடிக் கொடுத்த சுடர்க் கொடி வந்தாள்! சுரும்பமர் குழற் கோதை வந்தாள்! திருப்பாவை பாடிய செல்வி வந்தாள்! பட்டர்பிரான் புதல்வி வந்தாள்! வேயர் குல விளக்கு வந்தாள்! தென்னரங்கம் தொழும் தேசி வந்தாள்!'' என்று முன்னே கட்டியங் கூறிச் செல்வாராயினர். அரசன், பட்டநாதர் முதலாயினாருடன் கோதையாரின் சிவிகை திருவரங்கம் பெரிய கோயிலை அடைந்து, பெரிய பெருமாளுடைய முன்மண்டபத்தை

அடைந்தது. பின்பு கோதையார் பெருமாளைச் சேவிக்கப் பண்ணுவிக்கையில், அத்திருமாலின் அழகு இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல ஆண்டாளைக் கவரத் தொடங்கியது. சூடிக்கொடுத்த நாச்சியார் சிலம்பு ஆர்க்க, சீரார் வளையொலிப்ப, கொடியேரிடையாட, காதளவு மோடிக் கயல்போல் மிளிருங் கடைக்கண் பிறழ, அன்ன மென்னடை கொண்டு அருகிற்சென்று, இன்பக் கடலில் ஆழ்ந்து திருவரங்கன் திருவடி வருடக் கருதி, நாகபரியங்கத்தை மிதித்தேறி, நம்பெருமானது திருமேனியின் கண்மறைந்து, அவனை என்றும் பிரியாதிருப்பவளாயினர்.

அவ்வண்ணம் அரும்பேறு பெற்றத்தைத் தரிசித்து ஆழ்வாரும், அவரது சீடனுன வல்லபதேவனும் ஏனையோரும் வியப்புற்றிருக்கையில், திருவரங்கமுடையான் அர்ச்சக முகமாக ஆழ்வாரை அருகிலழைத்து, 'கடல் மன்னனைப் போன்று நீரும் நமக்கு மாமனுராய் விட்டீர்' என்று முகமன் கூறித் தீர்த்தம், திருப்பரியட்டம், மாலை திருச்சடகோபம் முதலியவற்றை வழங்கி, 'வில்லிபுத்தூர் உறைவானுக்கே தொண்டு பூண்டிரும்' என்று திருவாய்மலர்ந்து விடை கொடுத்தருளினன். ஆழ்வாரும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று, முன்போலவே இறைவனுக்கு மாலை அணிவிப்பதில் ஈடுபடுதலுடன் ஆர்வமென்பதோர் பூவையும் இட்டுக் கொண்டு எண்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்திருந்து, இறைமையின் இருப்பிடத்தை அடைந்தார்.

ஸ்ரீ ஆண்டாளால் பாடப்பெற்ற பாடல் தலங்கள்: (1) திருவரங்கம், (2) திருக்கண்ணபுரம், (3) திருமாலிருஞ் சோலைமலை, (4) ஸ்ரீவில்லிபுத்தூர், (5) திருவேங்கடம், (6) துவாரகை, (7) வட மதுரை, (8) திருவாய்பாடி, (9) திருப்பாற்கடல் முதலியனவாகும்.

10. தொண்டரடிப்பொடியாழ்வார்

சோழ நாட்டில் உள்ள திருமண்டங்குடியில் (கி.பி.8-ஆம் நூற்றுண்டு) பராபவ ஆண்டு மார்கழித் திங்கள் தேய் பிறையில் பொருந்திய சதுர்த்தசி திதியில் செவ்வாய்க் கிழமையன்று கேட்டை நட்சத்திரத்தில் ஸ்ரீ வனமாலையின் அமிசராய் முன்குடுமிச் சோழியரும் வைணவரும் ஆகிய வைணவ சோழியருக்குத் தொண்டரடிப்பொடியாழ்வார் அவதரித்தருளினுர். தந்தையார் இவருக்கு விப்பிரநாராயணர் என்ற பெயரை இட்டு, உபநயனம் முதலிய வைதிகச் செயல்களைச் செய்தார்.

விப்பிரநாராயணர் திருமணத்தில் விருப்பமற்று, பல தலங்கள்தோறும் சென்று, இறைவனை வணங்க எண்ணி யவராய் முதற்கண் திருவரங்கம் பெரிய கோயிலை அடைந் தார். அங்குப் பள்ளி கொண்டிருக்கும் அரங்கநாதனைச் சேவித்து, அவரது அழகில் ஈடுபட்டவராய், அங்கு மிக்க வனப்புள்ள நந்தவனத்தை அமைத்து, பெரியாழ்வார் போன்று இறைவனுக்கு மாலை கட்டித் தரும் திருப்பணியை மேற்கொண்டு அங்கேயே தங்கலானுர்.

அக்காலத்தில் திருவரங்கத்துக்கு வடக்கிலுள்ள உத்தமர்கோயிலில், மிக்க அழகுடையவளாய்த் தேவ தேவி என்னும் பெயருடன் தேவதாசி குலத்தில் பிறந்த ஒரு நங்கை தமக்கையுடன் நடனமாட உறையூருக்குச் சென்றுள். சோழன் முன்னிலையில் நடனமாடிப் பல பரிசுகள் பெற்றுத் திரும்புகையில் அவள் விப்பிரநாராயணரது நந்த வனத்தின் அழகில் ஈடுபட்டவளாய், அதற்குரியவனைத் தன் வயப்படுத்த எண்ணினுள். ஆனுல், அவளது தமக்கை தங்கையை நோக்கி, 'விப்பிரநாராயணர் இறை வழிபாட்டில் ஈடு பட்டுள்ளார். ஆதலினுல் அவரை உன் வயப்படுத்துதல் எனும் செயல் உன்னுலாகாது' என்றுரைத்தாள். தங்கை யாகிய தேவதேவி தமக்கையிடம்

அடைந்தது. பின்பு கோதையார் பெருமாளைச் சேவிக்கப் பண்ணுவிக்கையில், அத்திருமாலின் அழகு இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல ஆண்டாளைக் கவரத் தொடங்கியது. சூடிக்கொடுத்த நாச்சியார் சிலம்பு ஆர்க்க, சீரார் வளையொலிப்ப, கொடியேரிடையாட, காதளவு மோடிக் கயல்போல் மிளிருங் கடைக்கண் பிறழ, அன்ன மென்னடை கொண்டு அருகிற்சென்று, இன்பக் கடலில் ஆழ்ந்து திருவரங்கன் திருவடி வருடக் கருதி, நாகபரியங்கத்தை மிதித்தேறி, நம்பெருமானது திருமேனியின் கண்மறைந்து, அவனை என்றும் பிரியாதிருப்பவளாயினர்.

அவ்வண்ணம் அரும்பேறு பெற்றத்தைத் தரிசித்து ஆழ்வாரும், அவரது சீடனான வல்லபதேவனும் ஏனையோரும் வியப்புற்றிருக்கையில், திருவரங்கமுடையான் அர்ச்சக முகமாக ஆழ்வாரை அருகிலழைத்து, 'கடல் மன்னனைப் போன்று நீரும் நமக்கு மாமனுராய் விட்டீர்' என்று முகமன் கூறித் தீர்த்தம், திருப்பரியட்டம், மாலை திருச்சடகோபம் முதலியவற்றை வழங்கி, 'வில்லிபுத்தூர் உறைவானுக்கே தொண்டு பூண்டிரும்' என்று திருவாய்மலர்ந்து விடை கொடுத்தருளினன். ஆழ்வாரும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று, முன்போலவே இறைவனுக்கு மாலை அணிவிப்பதில் ஈடுபடுதலுடன் ஆர்வமென்பதோர் பூவையும் இட்டுக் கொண்டு எண்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்திருந்து, இறைமையின் இருப்பிடத்தை அடைந்தார்.

ஸ்ரீ ஆண்டாளால் பாடப்பெற்ற பாடல் தலங்கள்: (1) திருவரங்கம், (2) திருக்கண்ணபுரம், (3) திருமாலிருஞ் சோலைமலை, (4) ஸ்ரீவில்லிபுத்தூர், (5) திருவேங்கடம், (6) துவாரகை, (7) வட மதுரை, (8) திருவாய்பாடி, (9) திருப்பாற்கடல் முதலியனவாகும்.

10. தொண்டரடிப்பொடியாழ்வார்

சோழ நாட்டில் உள்ள திருமண்டங்குடியில் (கி.பி.8-ஆம் நூற்றுண்டு) பராபவ ஆண்டு மார்கழித் திங்கள் தேய் பிறையில் பொருந்திய சதுர்த்தசி திதியில் செவ்வாய்க் கிழமையன்று கேட்டை நட்சத்திரத்தில் ஸ்ரீ வனமாலையின் அமிசராய் முன்குடுமிச் சோழியரும் வைணவரும் ஆகிய வைணவ சோழியருக்குத் தொண்டரடிப்பொடியாழ்வார் அவதரித்தருளினுர். தந்தையார் இவருக்கு விப்பிரநாராயணர் என்ற பெயரை இட்டு, உபநயனம் முதலிய வைதிகச் செயல்களைச் செய்தார்.

விப்பிரநாராயணர் திருமணத்தில் விருப்பமற்று, பல தலங்கள்தோறும் சென்று, இறைவனை வணங்க எண்ணி யவராய் முதற்கண் திருவரங்கம் பெரிய கோயிலை அடைந் தார். அங்குப் பள்ளி கொண்டிருக்கும் அரங்கநாதனைச் சேவித்து, அவரது அழகில் ஈடுபட்டவராய், அங்கு மிக்க வனப்புள்ள நந்தவனத்தை அமைத்து, பெரியாழ்வார் போன்று இறைவனுக்கு மாலை கட்டித் தரும் திருப்பணியை மேற்கொண்டு அங்கேயே தங்கலானுர்.

அக்காலத்தில் திருவரங்கத்துக்கு வடக்கிலுள்ள உத்தமர்கோயிலில், மிக்க அழகுடையவளாய்த் தேவ தேவி என்னும் பெயருடன் தேவதாசி குலத்தில் பிறந்த ஒரு நங்கை தமக்கையுடன் நடனமாட உறையூருக்குச் சென்ருள். சோழன் முன்னிலையில் நடனமாடிப் பல பரிசுகள் பெற்றுத் திரும்புகையில் அவள் விப்பிரநாராயணரது நந்த வனத்தின் அழகில் ஈடுபட்டவளாய், அதற்குரியவனைத் தன் வயப்படுத்த எண்ணினுள். ஆனுல், அவளது தமக்கை தங்கையை நோக்கி, 'விப்பிரநாராயணர் இறை வழிபாட்டில் ஈடு பட்டுள்ளார். ஆதலினல் அவரை உன் வயப்படுத்துதல் எனும் செயல் உன்னுலாகாது' என்றுரைத்தாள். தங்கை யாகிய தேவதேவி தமக்கையிடம் '...

விடின் உனக்கு ஆறுமாத காலம் அடியவளாவேன்' என உறுதி கூறினாள்.

பின்பு தேவதேவி தனியே மெல்லியதொரு செங் காவிச் சேலையை உடுத்து, அவரை அடுத்துத் திருவடி களில் விழுந்து வணங்க, அவர், 'நீ யார்?' என்றார். அவள், 'நான் தீவினையால் தாசி குலத்தில் பிறந்தேனா யினும் அத்தொழிலைச் செய்ய உடன்படாது தேவரீரது திருவடியைச் சரணடைந்து உய்வு பெற நாடி வந்துற்றேன்' என்றாள். பின்பு, 'செடிகளுக்கு நீர் பெய்தல், பூப்பறித்தல், மாலை கட்டுதல், சோலையைப் பாதுகாத்தல் முதலிய பணிவிடைகளில் எதை நியமித்தாலும் செய்துவரக் காத்திருக் கிறேன்' என்று மிகுந்த வணக்கத்துடன் அவள் உரை செய்தாள். விப்பிரநாராயணரும் அளவது கபட எண்ணத்தை உணராமல் உடன்பட்டு தாம் அமுது செய்து மிகுந்த உணவினைக் கொடுத்துவர, அவளும் அதனை வாங்கி உட் கொண்டு பாத்தி கொத்துதல், நீர் ஊற்றுதல் முதலான செயல்களை ஊக்கத்துடன் செய்து, அவர்க்குத் தன்னிடத்து நம்பிக்கையுண்டாகும்படி நல்லவள்போல் நடித்து வந்தாள்.

பல மாதங்கள் கழிந்தபின், ஒரு நாள் பெருமழை பொழிந்து கொண்டிருந்த பொழுது, கருணை உள்ளத்தை உடைய அவர் வெளியிலே அவள் நனைந்து வருதலைப் பார்த்து, உள்ளே வந்து நிற்கும்படி கூறினார். அவளும் அருகில் வந்து, தனது மென்மொழிகளினாலும், மேனி மினுக் கினாலும் அவரது மனத்தைக் கவர்ந்து, அவரைத் தன் வயமாக்கிச் சில காலம் அவருடனிருந்து, பின்பு பொரு ளில்லாத அவரைப் பொருள் செய்யாது கைவிட்டுத் தன் வீட்டிற்குச் சென்றாள். விப்பிரநாராயணரும் அவள் பிரிவை ஆற்றாமல் அவளது வீட்டு வாயிலில் சென்று தயங்கி நின்றார்.

அவ்வளவில் திருமகள் திருமாலிடம் முன்போல் விப்பிர நாராயணனை ஆட்கொண்டு அந்தரங்க பக்தனுக்கியருள வேண்டும் என்று வேண்டினாள். இறைவனும் மனித வடிவம்

கொண்டு, திருக்கோயில் பாத்திரங்களுள் பொன்வட்டில் ஒன்றை எடுத்துச்சென்று விப்பிரநாராயணர் அறியாமல் தேவதேவியிடம் தந்து, 'நான் அழகிய மணவாளதாசன், விப்பிரநாராயணன் அனுப்பவந்தேன்' என்று கூற, தேவ தேவியும் விருப்பத்துடன், 'அவரை உள்ளே வரச் சொல்லும்' என்றாள். அடியார்க்கு எளியவனான எம்பெருமான் விப்பிர நாராயணரிடம் வந்து தேவதேவி உள்ளே வரச் சொன்னாள்' என்ன, விப்பிரநாராயணரும் உள்ளங்குளிர்ந்து உடல் பூரித்து உள்ளே போய்ச் சேர்ந்தார்.

அவ்விரவு கழிந்து பொழுது விடிந்த அளவில், பொன் வட்டிலைக் காணாத கோயில் காப்போர் அதனை அரசனுக்கு அறிவிக்க, அரசனும் அர்ச்சகர், பரிசாரகர் முதலானவர்களைத் தண்டித்து வருத்தினான். பின்னர் ஒற்றர்மூலம் தேவதேவியின் இல்லத்தில் பொன் வட்டிலிருப்பத்தை உணர்ந்து, தேவதேவியை அழைப்பித்து வினவ, அவள், 'விப்பிரநாராயணரின் ஏவலாளாகிய அழகிய மணவாளதாசன் மூலம் விப்பிரநாராயணர் இதனை அனுப்பினார்' என்றாள். விப்பிரநாராயணர், 'யான் ஒன்றும் அறியேன்' என்றும், 'தமக்கு ஏவலாளன் இல்லை' எனவும் மறுத்துரைத்தார். அரசனும், களவாடிய பொருளை வாங்கினமைக்குரிய அபராதப் பொருளையும், பொன் வட்டிலையும் தேவதேவியிடமிருந்து பெற்றுப் பெருமாளுக்களித்து, பின் விப்பிரநாராயணரைச் சிறையில் இட்டான்.

மீண்டும் அரங்கநாயகி அரங்கநாதனை அருள் புரியுமாறு வேண்ட, பெருமாளும் அரசனது கனவில் தாம் எழுந்தருளி, 'தாசியிடத்துக் காதல் கொண்ட இவ்வந்தணருடைய கருமத்தைப் கழித்தற்பொருட்டு நாமே பொன் வட்டிலைக் கொண்டுபோய்த் தந்து இவனைத் தண்டிப்பித்தோம்; உண்மையில் இவன் கள்வனல்லன்; தூய்மையாளனே' என்று தெரிவிக்க, அரசன் அமைச்சர் முதலியோரிடம் அறிவித்து, அப்பொழுதே விப்பிரரை விடுவித்து உபசரித்து அனுப்பிவிட்டான்.

பிறவிப் பெருஞ்சிறையினின்றும் விடுபடுதற்கு ஒரு முற்குறியாகக் காவல் விடுபெற்ற அந்தணராகிய விப்பிரர் தமது துளவத் தொண்டினை மறந்து, பொருட் பெண்டிரின் பொய்ம்மை முயக்கத்தில் ஆழ்ந்திருந்ததற்கு வருந்தி, பெரியோர்களைச் சார்ந்து, பிராயச்சித்தம் தமக்குச் செய்யுமாறு வேண்டினர். பெரியோர்களும் பல நூற்பொருள்களை ஆராய்ந்து, 'பாவங்கள் யாவும் நீங்குதற்கு ஏற்ற பிராயச்சித்தம் பாகவதர்களுடைய திருவடித் தீர்த்தத்தை உட்கொள்வதே' என்று உய்யுமாறு கூற, அவர் அங்ஙனமே அதனைப் பெற்றுப் பருகித் தூய்மையராயினர். வைணவர்களுடைய திருவடித் தூளியாய் அவர்கட்குக் கீழ்ப்படிந்து அடிமை பூண்டு ஒழுகி, அதனல் தமக்கு அதுவே பெயராக அவர் ''தொண்டரடிப்பொடி'' என்று திருநாமம் பெற்றார்.

பின்னர் இறைவனருளால் அர்ச்சாவதாரத்தில் மிக்க ஈடுபாடு கொண்டு, திருவரங்கத்துப் பெருமானுக்குத் துளவத் தொண்டு பூண்டு வாழ்ந்து, தமது அனுபவத்தைப் பிரபந்தமூலமாகப் பிறர்க்குத் தெரிவிக்கக் கருதி திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்ற திவ்வியப் பிரபந்தங்களை அருளிச்செய்து உலகத்தாரை வாழ்வித்து, பல்லாண்டுகள் திருவரங்ககத்தில் வாழ்ந்தார்.

தேவதேவியும் தான் உய்வு பெற எண்ணித் தனது பொருளனைத்தையும் அரங்கனுக்கே உரியதாக்கிவிட்டு கோயிலிலே திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல் முதலிய அடிமைத் தொழில்களைச் சில காலம் செய்து கொண்டிருந்து முடிவில் நற்கதி நண்ணினள்.

தொண்டரடிப்பொடியாருடைய பாசுரங்கள் யாவும் இன்னிசை உடையனவாய், பக்திச் சுவை நிறைந்து தேனினும் இனிமை பயப்பனவாய்ப் பொலிகின்றன.

தொண்டரடிப்பொடி ஆழ்வரால் பாடப்பெற்ற தலங்கள்: (1) திருவரங்கம், (2) திருவயோத்தி, (3) திருப்பாற்கடல் முதலியனவாகும்.

11. திருப்பாணாழ்வார்

''ஊரெனப்படுவது உறையூர்'' எனப் போற்றிப் புகழும் சோழர் குல வேந்தர்களின் தலைநகராகும் உறந்தையம்பதி சரித்திரத்தில் பெருமைபடப் பேசப்பட்டுள்ளது. செம்பியர் களின் ஆட்சியில் சிறப்புற்றுப் பெருமை பெற்றிலங்கிய திருவுறையூரில் செந்நெற் பயிரில் (கி. பி. 8-ஆம் நூற்றாண்டு) துன்மதி ஆண்டு கார்த்திகை மாதம் தேய் பிறையில் பொருந்திய துவிதியை திதியில் புதன்கிழமை யன்று உரோகிணி நட்சத்திரத்தில் திருமாலினது ஸ்ரீவத் ஸத்தின் அமிசராய் திருப்பாணாழ்வார் அவதரித்தருளினார்.

பிறவாது பிறந்த அக்குழந்தையை அவ்வூரில் பஞ்சம ஜாதியில் பாணர் குலத்துப் பிறந்தானொருவன் நெற்பயிர் பக்கல் வந்தபொழுது கண்டான். கண்ட அளவில் பெற்றோர் யாவர் எனச் சுற்றுமுற்றும் பார்த்து, ஒருவரும் இன்மையால் தனது நல்வினைப் பயன் காரணமாக நாராயணன் தனக்கு அருளிச்செய்த செயலோ என மகிழ்ந்து, எடுத்துச் சென்று மனைவியிடம் அளித்தான். மனைவியும் மலடு தீர்ந்த தன்மையால் பசுவின் பால் முதலிய தூய உணவினைக் கொடுத்துக் குழந்தையைக் காத்து வந் தாள். திருமாலருளால் பிறந்த இவர் தாம் புகுந்த குலத் துக்கு ஏற்ற யாழ்ப் பாடலில் தேர்ச்சி பெற்று, அதனால் பாணர் குலத்தில் சிறப்புற்று இலங்கினமையால், யாவரும் பாணர் குலத் தலைவர் என்பது தோன்ற 'திருப்பாணர்' என இவரை அழைத்தனர்.

திருப்பாணர் பின் அரங்கநாதருக்குப் பாடல் திருத் தொண்டு செய்யும் எண்ணத்தினராய்ப் புறப்பட்டு, தாம் தாழ்ந்த குலத்தில் வளர்ந்தவராதலால் திருவரங்கத்தில் அடியிடத் துணியாமல், தென் திருக்காவிரியின் தென்கரை யில் திருமுகத்துறைக்கெதிரில் யாழுங்கையுமாக நின்று கொண்டு, திருவரங்கனைத் திசை நோக்கித் தொழுதார். பின்பு திருவரங்கநாதப் பெருமானைக் குறித்துப் பல

பாடல்களைக் கண்டமும் கருவியுமொக்க, கேட்பவர் செவியும் மனமும் குளிர, எம்பெருமான் திருவுள்ளம் மகிழப் பாடினார். இங்ஙனம் நாள்தோறும் வைகறையில் திருப்பாணர் திருவரங்கனைக் குறித்துப் பல பாடல்களைத் தம்மை மறந்து பக்தியால் பரவசப்பட்டு பாடிக்கொண்டிருப்பார்.

ஒரு நாள் திருவரங்கநாதனை ஆராதிப்பவராகிய உலோகசாரங்க முனிவர் என்பவர் காவிரியில் நீராடித் திருமண் அணிந்து, துளவமணி மாலையையும், தாமரை மணிமாலையையும் கழுத்தில் அணிந்துகொண்டு, திருவரங்கநாதன் திருமஞ்சனத்திற்கு நீர்கொண்டு செல்லப் பொற்குடத்தைக் கையிலேந்தி அங்கு வந்தார். அவர் திருப்பாணரைக் கண்டு கைதட்டிக் கூவி, 'அப்பாற் செல்' என்று கூவினார். திருப்பாணர் இவ்வுலகத் தொடர்பை மறந்திருந்ததனால் அம்மொழியைச் செவியுறாமலேயே வாளா நின்றிட்டார். இதனால் கோபமுற்ற முனிவர் ஒரு கல்லை எடுத்து வீசினார். அது பாண் பெருமாளுடைய நெற்றியில் பட்டுக் குருதி பெருகச் செய்தது. திருப்பாணரும் தெளிவுற்று, முனிவர் எதிர்ப்புறம் சேய்மையில் நிற்பதைக் கண்டு, மனமும் உடலும் நடுங்கி அவ்விடத்தினின்று சென்று விட்டார்.

பிறகு உலோகசாரங்க முனிவர் பொற்குடத்தில் காவிரியின் நீரை முகந்துகொண்டு, திருவரங்கநாதன் முன் சென்றார். அப்பொழுது திருவரங்கநாதன் நெற்றியினின்றும் செந்நீர் பெருகி வந்துகொண்டிருந்தது. இதனை முனிவரும் அர்ச்சகரும் கோயில் அதிகாரிகளுக்கு அறிவிக்க, அவர்களும் இவ்வுற்பாதச் செய்தியை அரசனுக்குக் கூற, அமைச்சர்களுடன் அரசன் ஆராய்ந்தும் காரணம் காணாது, சுவாமி திருவடியிலே பாரத்தை வைத்திட்டான்.

அதற்கு முன்பாக ஒரு நாள் பிராட்டி பெருமானை நோக்கி, 'பல காலமாக நம்மைப் பாடிவருகிற பாணன் புறம்பே நிற்கப் பார்த்திருக்கலாமோ?' என்று விண்ணப்பம் செய்ய, எம்பெருமான் விரைவிலே அவரைத் தம் அருகில்

அழைத்துக்கொள்வதாக வாக்களித்திருந்தனன். அங்ஙனம் வாக்களித்த வண்ணமே திருப்பாணருக்கு அருள்புரிந்து அவருடைய அன்பையும் செயலையும் பெருமையுடன் உலகத்தில் விளங்கச் செய்யவும், கடவுளுடைய திருவருளுக்கு அன்பே முதன்மையானதாகும் என்னும் அருமறையினுடைய உண்மையை இவ்வுலகத்தினர் பலரும் அறியவும் திருவரங்கேசனுர் திருவுள்ளங் கொண்டார். அந்நாள் இரவில் உலோகசாரங்கருடைய கனவில் தோன்றி இறைவர், 'முனிவ! நீ சென்று எம்முடைய நல்லன்பராகிய திருப்பாணரை இழிகுலத்தவர் எனக் கருதாமல் உன்னுடைய தோள்மீது எழுந்தருளச் செய்து, எம் திருமுன்புகொண்டு வருவாயாக' என்று கட்டளையிட்டருளினுர்.

உலோகசாரங்க முனிவர் வைகறையிற் கண் விழித்து எழுந்து, கனவிற் கடவுளிட்ட கட்டளையை நினைந்து மிக்க வியப்பை அடைந்தார். அரங்கரது ஆணையை நிறைவேற்ற எண்ணி அமலநாதரிடம் அன்புடைப் பெரியார் பலரைத் தம்முடன் வரவழைத்துக்கொண்டு பாண்பெருமாள் வழக்கமாக நின்று திருப்பாடல் தொண்டு புரியும் இடத்தை நாடிக் களிப்புடன் நடந்தார்.

தொண்டரெல்லாம் தொழுதேத்தும் தன்மையரான பாண்பெருமாளையணுகிய உலோகசாரங்கர், தலைமேற் கைகளைக் கூப்பி, மும்முறை வலம் வந்து, மண்ணிற் கிடந்து பாணருடைய திருவடிகளை வணங்கியெழுந்தார். பின்பு திருப்பாணுழ்வாரை நோக்கி, 'தேவரீரைத் தம்மிடத்துக்கு எழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு வரவேண்டுமென்று நம் பெருமாள் அடியேனுக்குக் கட்டளையிட்டருளினுர்' என்று சொன்னுர். பாணர் தலைவர் 'நீசனுன அடியேன் திருவரங்கப்பெருநகரை மிதித்திடுவேனே?' என்று தம் சாதி இழிவைச் சொல்லி மறுத்திட்டார்.

அப்பால் முனிவர், 'தேவரீர் மிதித்திடவேண்டா; பெருமாள் பெரிய திருவடியின் திருத்தோளில் எழுந்தருளுதல்போலத் தேவரீர் அடியேனது தோளில் ஏறியருளும்'

என்று பிரார்த்தித்தார். 'தங்கள் பாதத்திலே தலையை வைத்து வணங்குவதற்குரிய யான் இக்கொடுந்தொழிலைச் செய்யேன்' என்று பாணர் கூறினர். பின்னர் முனிவர் கடவுளின் கட்டளையைக் கூறி வற்புறுத்தத் திருப்பாணர் தம்முடைய உயிரையும், உடலையும் இறைவரது அடியிணைக்கே உரியனவாக்கி மெய்மறந்து நின்றார்.

உலோகசாரங்க முனிவர், பாணநாதரைத் தோளிலேற்றிக் கொண்டு சென்று அரங்கநாதனது திருமுன்பே இறக்கிவிட்டார்.

உடனே திருப்பாணாழ்வார் இறைவனது திருவடி முதல் தலைவரையிலுமுள்ள அழகிய அவயவங்களெல்லாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கண் குளிரப் பார்த்து மனமுருகினர். எல்லா அவயவங்களிலும் ஈடுபட்டுச் சேவித்துக் களித்தார்; மணவாளருடைய அழகிற் சிறந்த எல்லா அவயவங்களிடமும், தாம் நுகர்ந்த அழகையும் இன்பத்தையும் உலகத்தார் எல்லாரும் நுகர்ந்து இன்புற்று உய்யத் திருவுள்ளங்கொண்டார்! அரங்கரது திருமேனியழகைச் சிறந்த பத்துப் பாட்டுக்களால் பாடினர். இந்த அருளிச்செயலுக்கு அமலனாதிபிரான் என்று பெயர்.

பின்னர் மக்கள் பலருங்காணத் திருப்பாணாழ்வார் பெரிய பெருமாளுடைய திருமலரடிகளையணுகிக் கீழே விழுந்து வணங்கி, அத்திருவடிகளினிடமே மறைந்து பேரின்ப வீட்டை அடைந்தார். திருப்பாணாழ்வாரைத் தூக்கித் தம் திருமுன்பு கொணர்ந்தமையைக் கருதி அரங்கநாதர், அந்த உலோகசாரங்கரையும் ஆட்கொண்டு, என்றும் அழிதலில்லாத பேரின்ப வீட்டை அவருக்கும் அளித்தருளினர்.

திருப்பாணாழ்வாரால் பாடப்பெற்ற தலங்கள்: (1) திருவரங்கம், (2) திருவேங்கடம், (3) பரமபதமம் முதலியனவாகும்.

12. திருமங்கையாழ்வார்

காவிரி நதி பாய்தலின் காரணமாகப் பயிர் வளம் சிறந்து விளங்கும் சோழ நாட்டின் பல உட்பிரிவுகளில் திருவாலி நாடு என்பதும் ஒன்று ஆகும். அந்நாடு தன்னகத்தே பல ஊர்களை உடையது. அவற்றுள் சிறப்புற்றிலங்குவது திருக்குறையலூர் என்னும் ஊராகும். இத்திருக்குறையலூரில் சதுர்த்த வருணத்தில் ஆலிநாடுடையாருக்கும் அவரது மனைவியாகிய வல்லித்திரு என்னும் அம்மைக்கும், (கி.பி. 8-ஆம் நூற்றாண்டு) நள ஆண்டு கார்த்திகைத் திங்கள் பௌர்ணமி திதியில் வியாழக்கிழமையன்று கிருத்திகை நட்சத்திரத்தில் சார்ங்கமென்னும் வில்லின் அமிசராய் அவதரித்தருளினர் திருமங்கையாழ்வார்.

இவர்க்குப் பிள்ளைப் பருவத்தில் நீலநிறத்தர் என்று பெற்றோர் திருப்பெயர் இட்டார்கள். இவர் சோழ அரசனிடம் படைத்தலைவனாக இருந்து, பல வெற்றிகளைத் தேடித் தந்து, சோழ நாட்டின் மேன்மையை எங்கும் விளங்கும்படி செய்தார். அதனால் சோழ அரசன் இவர்பால் அன்பு மிக்கவனாகி, இவருக்கு ஆலிநாட்டை அளித்து, அதற்குத் திருமங்கை என்னும் பதியைத் தலைநகராக அமைத்து, இவரைத் தன் சேனைத் தலைவர்களுள் முதன்மையானவராகச் செய்து, பரகாலன் என்னும் வீரப் பட்டத்தையும் அளித்தான். இவர்க்கு நீர்மேல்நடப்பான், நிழலில் ஒதுங்குவான், சாயை பிடிப்பான். தாளூதுவான், தோலாவழக்கன், உயரத்தொங்குவான் முதலான அமைச்சர்களும் இருந்தார்கள். இவர் ஏறும் குதிரைக்கு ஆடல்மா என்று பெயர்.

இங்ஙனம் பரகாலர் இருக்கையில், சுமங்கலை என்னும் தேவமாது தோழியருடன் இமயமலையின் வளங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையில், திருமாலின் அமிசராகிய கபில முனிவர் சீடர்களுக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தமையைக் கண்டார். சீடர்களுள் ஒருவர் விகார வடிவினராக இருக்க, அவரைக் கண்ட சுமங்கலை ஏளனம் செய்

தார். அதனுல் சினமுற்ற கபில முனிவர் சுமங்கலையை நோக்கி, 'நீ பூமியிற் சென்று மானிடப் பெண்ணுகப் பிறந்து, ஒரு மனிதனுடைய மனைவியாய் வாழக் கடவாய்' என்று சபித்தார். அப்பெண் அஞ்சி நடுங்கி மன்னிக்குமாறு வேண்டினுள். கபில முனிவர், அவளை நோக்கி, ''பரகாலரது மனைவியாகி, அவரது போர்க்கள வேள்வியைப் போக்கித் திருமாலின் நல்லடியாராகத் திருத்தி, அவருடன் வாழ்ந்திருந்து, அதனுல் உன் குறை தீர்ந்து, பொன்னுட்டை அடைவாயாக'' என்று அருள் புரிந்தார். அவ்வண்ணமே சுமங்கலையும் திருவாலி நாட்டிலுள்ள திருநாங்கூர்ப் பொய்கையில் தோழியருடன் நீராடிக் குமுதமலர் கொய்து கொண்டிருந்தாள். தோழியர் இவளை விடுத்துப் போனுர்கள். சுமங்கலை குமுத மலரையே தனக்குத் தாயாகக் கொண்டு அதனருகில் குழந்தையாய்த் தோன்றினுள்.

திருமாலிடம் நீங்காத அன்புடையவரும், திருநாங்கூரில் வாழ்பவருமாகிய ஒரு மருத்துவர் பொய்கைக்கு நீராடற் பொருட்டு வர, குழந்தையைக் கண்டு, யாருமின்மையால் இல்லம் எடுத்துச் சென்று மனைவியிடம் மகிழ்ச்சியுடன் அளிக்க இருவரும் அக்குழந்தைக்கு, 'குமுதவல்லி' என்னும் பெயரிட்டுத் தம் குழந்தையே போன்று செல்வமுடன் வளர்ப்பாராயினர். குமுதவல்லியாரும் திருமணப் பருவத்தை அடைந்தார். இச்செய்தி கேட்ட பரகாலர் என்னும் பட்டப் பெயருடன் மங்கை நகரத்தை ஆட்சி புரிந்த திருமங்கை மன்னர், திருவாங்கூரிலுள்ள மருத்துவர் இல்லத்திற்கு எழுந்தருளி, அவரது வளர்ப்புப் பெண்ணுகிய குமுதவல்லியைத் தனக்குத் திருமணம் செய்து தரவேண்டும் என்று விண்ணப்பித்தார். அவ்வளவில் குமுதவல்லியார், ''திருவிலச்சினையும், திருநாமமும் உள்ளவர்க்கு அன்றி மற்றவர்க்கு என்னைப் பேசவிடேன்'' என்ருள். அங்ஙனமே திருமங்கை மன்னரும் திருநறையூரில் நம்பி திருமுன்பே சென்று திருவிலச்சினை தரித்து, பன்னிரண்டு திருநாமங்களையும் சார்த்திக்கொண்டு வந்தார். பின்பு குமுதவல்லியார் திருமங்கை மன்னராகிய ஆழ்வாரைப் பார்த்து, ''ஓராண்டு காலம் நாள்தோறும் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைணவர்களை அமுது

செய்வித்து, அவர்களுடைய சீபாத தீர்த்தமும் தளிகைப் பிரசாதமும் அங்கீகரித்து நிறைவேற்றினுல் உம்மைப் பதியாக அடைவேன்'' என்று பணித்தாள். ஆழ்வாரும் அதற்கு இசைந்து, உறுதி மொழி அளிக்க, குமுதவல்லியாரும் அவரை மணம் செய்துகொள்ள இசைந்தார். அதன் பின்பு குமுதவல்லியாரை அவள் பெற்ரேர் நீலநிறத்தார் ஆகிய ஆழ்வாருக்கு நாடும் ஊரும் அறிய நல்லதொரு நாளில் திருமணம் செய்தளித்தார்கள்.

குமுதவல்லியாரைத் தமது வாழ்க்கைத் துணைவி யாக்கிக்கொண்ட திருமங்கை மன்னராகிய ஆழ்வாரும், நாள்தோறும் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அன்னம் அளித்து ஆராதித்தார். இங்ஙனம் நாள்தோறும் நடை பெறும் நல்விருந்தினை நானிலத்தோர் நயம்படப் பலருக்கும் நவின்று வந்தனர். இச்செய்தி சோழ வேந்தனது செவிக்கும் எட்டிற்று. செம்பியன் செவிக்கு அமைச்சர்கள் ஆழ்வாரது இச்செய்தியுடன், மங்கை நகர மன்னரும் ஆழ்வாருமாகிய பரகாலரிடமிருந்து பகுதிப் பணமும் வருவதில்லை என்ற செய்தியையும் அறிவித்தார்கள். உடனே சோழ வேந்தன் சினமுற்றுத் தூதுவர் இருவரைப் பரகாலரிடம் பகுதிப் பணத்தை வாங்கிவர அரச முத்திரை தாங்கிய முடங் கலுடன் அனுப்பினுன். தூதுவர்களை வரவேற்ற பரகாலர் பகுதிப் பணம் தருவதாக வாக்களித்து நாட்களைக் கடத்தி னுர். தூதுவர்கள் பகுதிப் பணத்தை விரைவில் தருமாறு வற்புறுத்தினுர்கள். பரகாலராகிய ஆழ்வார் கோபம் கொண்டு தூதுவர்களை அடித்து விரட்டினுர். அவர்களும் அஞ்சி அங்கிருந்து அகன்று, அரசனிடம் நடந்த நிகழ்ச்சியினை அறி வித்தார்கள். பரகாலர் தனது ஆணையை மீறினதற்காகக் கோபம் கொண்ட சோழ வேந்தன், தனது சேனுதிபதியை அழைத்துப் படையுடன் சென்று பரகாலனை அங்குப் பிடித்து வருமாறு ஏவினுன்.

சேனுதிபதியும் யானை, குதிரை, காலாட்களுடன் சென்று பரகாலரை வளைத்துப் பிடிக்கப் பார்க்க, மங்கை மன்னர் குதிரையின் மேலேறித் தம் படைகளுடன் வந்து

ஆரவாரத்துடன் அவர்கள்மேல் விழுந்து, சேனைகளை எல்லாம் துண்டித்துத் துரத்தியோட்டிவிட்டார். சேனாதிபதியும் வெட்கப்பட்டு ஓடி அதனை அரசனுக்கு அறிவித்தான். சோழ வேந்தனும் அதனைக் கேட்டு, கோபத்தினால் கண்கள் சிவந்து அப்பொழுதே, தனது சதுரங்க பலத்துடன் புறப்பட்டு வந்து, பரகாலரைப் பிடித்துக்கொள்ளும்படி தன் படை வீரர்களுக்கு உத்தரவு அளித்தான். படையினரும் அங்ஙனமே பரகாலரை வளைத்துக்கொள்ள, பரகாலரும் முன்புபோல வாளுங் கையுமாய் ஆடல்மா என்னும் தமது குதிரையின்மேல் புறப்பட்டு வந்து, ஆரவாரத்துடன் எதிர்த்து வந்த படையினரைப் பாழாக்கித் துரத்த, எல்லாரும் தோற்று ஓடிவந்து வேந்தன்மேல் விழுந்தார்கள். வேந்தனும் ஓடுகிறவர்களை மிக்க சினத்துடன் நிறுத்திப் பின்பு பரகாலரைப் படைகளின் நடுவே அகப்படும்படி வளைத்துக்கொண்டான். பரகாலரும் வீரமுடையவராய்த் தமது கையிலிருந்த வாளின் பலத்தினால் படையை மதியாமல் போரிட்டு அழிக்கத் தொடங்கினார். அதனைக் கண்ணுற்ற அரசன் இவரைப் பார்த்து, 'நீவிர் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை. உமது வீரத்தினைக் கண்டு மிக்க மகிழ்ச்சியுற்றேன். நீர் செய்த தவறுகளை எல்லாம் மறந்தேன். அஞ்சாமல் என்னை நம்பி வருக' என அழைக்க, பரகாலரும் அரசனிடம் பகைமை மறந்து சென்று நின்றார். அரசனும் பரகாலரது வீரத்தைப் பாராட்டினான். பின்பு அரசன் பரகலாரை நோக்கி, தரவேண்டிய பகுதிப் பணத்தை மட்டும் தரவேண்டும் எனவும், அதுவரையில் அமைச்சர்களின் பாதுகாவலில் பரகாலர் இருக்கவேண்டும் எனவும் பணித்தார். அமைச்சர்களும் பரகாலரைப் பிடித்துக் கொண்டு வந்து ஒரு தேவாலயத்தில் சிறை வைத்தனர்.

இப்படி, ஆழ்வார் அந்தக் கோயிலில் மூன்று நாட்கள் உணவின்றிச் சிறையிருந்தார். ஆழ்வாரது கனவில் பேரருளாளர் எழுந்தருளியிருந்து, 'உமது பகுதிக்கு வேண்டிய பணம் நாம் தருகிறோம். காஞ்சீபுரத்திற்கு வாரும்' என்றருளினார். பரகாலரும் மறுநாள் அமைச்சர்களிடம், 'காஞ்சீபுரத்தில் பணம் புதைத்து வைக்கப்பட்டுள்ளது. அங்கு

கள் அதனை அரசரிடம் விண்ணப்பிக்க, அரசரும் உடன்பட, தக்க காவலுடன் பரகாலரைக் காஞ்சீபுரத்திற்கு அமைச்சர் ஒருவர் அழைத்துச் சென்றார். காவலுடன் காஞ்சீபுரம் சென்ற பரகாலர், புதையல் பொருளைக் காணுமல் வருந்திக் கிடந்தார். அவ்வளவில் கருணைத் தன்மை நிறைந்தவரான அருளாளப் பெருமாள், ''அஞ்சாதே கொள்ளும்'' என்று வேகவதி தீரத்தில் பணம் இருக்கும் இடத்தை அடையாள மாகக் காட்டியருள, இவரும் அங்கே பணம் கண்டெடுத்து, கப்பப் பணத்தைக் கொடுத்து, மிகுதியை ஸ்ரீவைணவர்க்கு உணவளித்தற்காக வைத்துக்கொண்டார்.

அமைச்சர் நிகழ்ந்த செய்தியை அரசனுக்கு அறிவித்து அரசர் முன்பாகக் கப்பப் பணத்தை வைத்தார். வேந்தன், காஞ்சீபுரம் வரதராஜப் பெருமாள் பணம் தந்த செய்தியைக் கேட்டு வியப்புற்று, இவர் மனிதர்களுள் மேம்பட்ட பெரு மையுடையவர் என்று எண்ணி, அவர் அளித்த கப்பப் பணத் தைக் கருவூலத்தில் சேர்க்காமல் ஆழ்வாரை அழைப்பித்து அவரிடமே அப்பணத்தையும், சிறப்பாக வெகுமதியையும் அளித்து அவற்றை உணவிடுதற்கு வைத்துக்கொள்ளுமாறு வேண்டி, ஆழ்வாரைப் பட்டினி போட்ட பாவத்தைப் போக் கிக்கொண்டான். ஆழ்வாரிடம் உள்ள பணம் யாவும் செல வழிந்ததும், வழிப்பறி செய்தேனும் பணம் சேர்த்து ஸ்ரீவைண வர்களுக்கு உணவளிக்கும் எண்ணங்கொண்டு, வழிப்பறி செய்து பொருள் ஈட்டி வந்தார்.

இப்படியிருக்கையில், ஆழ்வார் வழிப்பறி செய்தற்கு வேண்டும் பரிவாரத்தையும் கூட்டிக்கொண்டு, திருமணங் கொல்லையில் ஓர் அரச மரத்தில் பதுங்கியிருந்தார். ஸ்ரீவைண வர்களுக்காகவே வழிப்பறி செய்யும் பரகாலரது எண்ணத்தை உணர்ந்த பெருமாள் அவ்வழியில் மணவாளக் கோலங் கொண்டு மனைவியுடன், எல்லா அணிகலன்களையும் அணிந்து கொண்டு, பலவகைத் திரவியங்களுடன் பெருந்திரளோடு வந்துற்றார். இக்கூட்டத்தைக் கண்ட ஆழ்வார், மிக்க மகிழ்ச்சியுடன் [illegible]

வளைத்துக்கொண்டு, ஆடை அணி கலன்களையெல்லாம் கவர்ந்துகொண்டு, அறுகாழி மோதிரத்தைக் கடித்து வாங்க, எம்பெருமானும் இதைக் கண்டு 'நம் கலியனே' என்றருளிச் செய்தார். பின்பு இவை எல்லாவற்றையும் சுமை சுமையாகக் கட்டி எடுக்கப் பார்க்க அவை பெயர்க்கவும் பெயராதபடியால் மணவாளனான அந்தணனைப் பார்த்து, ''நீ மந்திரவாதம் பண்ணினாய்'' என்று ஆழ்வார் வருந்தினார். பெருமாள், 'அம்மந்திரத்தை உமக்குச் சொல்லுகிறோம், வாரும்' என்று கழுத்தையணைக்க, ஆழ்வாரும் உடனே, 'நீ சொல்லாவிடில் இந்த வாளுக்கு இறையாவாய்' என்று தம் கையில் வாளைக் காட்டி அதிகாரத்துடன் கேட்க, எம்பெருமானும் எட்டு எழுத்தாய் மூன்று பதமான பெரிய திருமந்திரத்தை வலத்திருச் செவியில் செவிக்கின்பமாக உபதேசித்துக் காட்சி கொடுத்தார். இவ்வாழ்வார் தாம் அறிந்த திருமந்திரத்தையும், அதற்கு உள்ளீடான ஸ்ரீமந் நாராயணனுடைய வடிவமாகிய உருவத்தையும் அருள்மாரி என்னும்படி பெரிய பிராட்டியருளாலே கண்டு களித்தார்.

இதனாலுண்டான அன்பினாலும், வியப்பினாலும் அவர் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்கிற ஆறு பிரபந்தங்களையும் அருளிச் செய்தார்; நம்மாழ்வார் அருளிச் செய்த நான்கு வேதங்களின் சாரமாகிய நான்கு பிரபந்தங்களுக்கும் ஆறு அங்கமாக ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்கிற நான்கு விதமான கவிகளால் அருளிச் செய்து சிறப்புற்றார். இதனால் பரகாலருக்கு ''நாலுகவிப்பெருமாள்'' என்னும் பட்டப் பெயர் வழங்கலாயிற்று.

முன்பு அவர் திருமொழி அருளிச் செய்த தலங்கள் தோறும் சென்று, ஆங்காங்கு எழுந்தருளியுள்ள திருமாலை வணங்கிப் பின் சோழ மண்டலத்திற்கு எழுந்தருளினார். அவ்வமயம் ஆழ்வாரின் சீடர்கள், ''நாலுகவிபெருமாள் வந்தார்! நம் கலியன் வந்தார்! ஆலிநாடர் வந்தார்!

அருள்மாரி வந்தார்! கொங்கு மலர்க் குழலியர் வேள் வந்தார்! மங்கை வேந்தர் வந்தார்! பரகாலர் வந்தார்!'' என்று விருது கூறிச் சென்றனர். அங்கேயிருந்த சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவரும், சீகாழிச் செல்வரும், ஞானப் பால் உண்டவரும் ஆகிய திருஞானசம்பந்தரின் சீடர்கள், திருமங்கை மன்னர் நாலுகவிப்பெருமாள் என்று விருது பெற்றவராய் விருதூதல் கூடாது என்று மறுக்க, பின்னர் ஆழ்வார் வெண்ணெயுண்ட தடாளனை எழுந்தருளுவித்துக் கொண்டு, சம்பந்தருடன் தர்க்கித்து, ''ஒரு குறளாயிருநிலம்'' என்ற திருமொழியை அருளிச்செய்து, தம் பெருமையெல் லாம் புலப்படும்வண்ணம் பாடல் பாடினர்.

ஞானசம்பந்தர் உடனே ஆழ்வாரை நோக்கி, ''உமக்கு நாலுகவிப்பெருமாள் என்னும் விருது பொருந்துமாதலினல் விருதூதிக்கொண்டு செல்வீர்'' என்று கூறினர்.

பின்பு திருமங்கை மன்னர் பல தலங்கள்தோறும் சென்று சேவித்துத் திருவரங்கம் வந்து, அங்குள்ள பெரிய பெருமாளுக்கும் அழகிய மணவாளர்க்கும் விமானம், மண்டபம், திருத்தளிகை, திருமதில், கோபுரம் முதலிய தொண்டுகள் செய்ய விரும்பினர். அதற்காக நாகப்பட்டினம் சென்று பெரும் பொன்னை எடுத்து வந்தார்; அதனை விற்றுப் பெற்ற பொருளைக் கொண்டு விமானம், மண்டபம் முதலியன கட்டுவித்து வருகையில், தொண்டரடிப்பொடியாழ்வார் பெரிய பெருமாளுக்குத் திருமாலை சேர்க்கின்ற இடம் நேர்பட, அதனைத் தவிர்த்து, ஒதுங்கியிருக்கத் திருமதிலைக் கட்டு வித்தார். இதனை அறிந்த தொண்டரடிப்பொடியாழ்வார் மலர் பறிக்கும் தமது ஆயுதத்திற்குத் திருமங்கை மன்ன ருடைய பெயர்களுள் ஒன்றான 'அருள்மாரி' என்னும் பெயரை இட்டு மகிழ்ந்தார்.

பின்னர் திருமங்கை ஆழ்வார் விமானம், மண்டபம், கோபுரம் முதலிய திருத்தொண்டுகளைச் செய்து உலகை வாழ்வித்தருளினர்.

இவரால் பாடப்பெற்ற தலங்கள்: (1) திரு அட்டபுயகரம், (2) திரு அரிமேய விண்ணகரம், (3) திரு அன்பில், (4) திரு ஆதனூர், (5) திரு இந்தளூர், (6) திரு உறையூர், (7) திருவூர கம், (8) திருக்கண்டியூர், (9) திருக்கரம்பனூர், (10) திருக் காரகம், (11) திருக்கார்வனம், (12) திருக்காவளம்பாடி, (13) திருக்காழிச் சீராமவிண்ணகரம், (14) திருக்கூட லூர், (15) திருச்சாளக்கிராமம், (16) திருச்சிங்கவேள் குன்றம், (17) திருச்சித்திரகூடம், (18) திருச்சிறுபுலி யூர், (19) திருச்செம்பொன்செய்கோயில், (20) திருத் தஞ்சை மாமணிக்கோயில், (21) திருத்தலைச் சங்க நாண் மதியம், (22) திருக்கடன்மல்லை, (23) திருக்கடிகை, (24) திருக்கண்ணங்குடி, (25) திருக்கண்ணபுரம், (26) திருக் கண்ணமங்கை, (27) திருக்கள்வனூர், (28) திருக்குடந்தை (29) திருக்குறுங்குடி, (30) திருக்கூடல், (31) திருக்கோட்டி யூர், (32) திருக்கோவலூர், (33) திருநீர்மலை, (34) திரு வரங்கம், (35) திருவல்லிக்கேணி, (36) திருவிடவெந்தை (37) திருவிண்ணகர், (38) திருவெஃகா, (39) திருவேங் கடம், (40) திருநீரகம் முதலியனவாம்.
